

சிந்துபுரம், வட்டுக்கோட்டையை
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# தவமணியம்மா துரைஐயா

அவர்களின்

# நினைவு வெளியீடு



24.10.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்போடு எமை
அணைத்து,
தலை நிமிர்ந்து நாம் வாழ
வழிதந்த, தங்கள்
பாதாரவிந்தங்களில்
இம்மலரைச்
சமர்ப்பிக்கின்றோம்.

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
1925
*
11
*
26

மறைவு
2005
*
10
*
02

# திருமதி துரைஐயா தவமணியம்மா

## திதி நிருணயம்

பார்த்திப ஆண்டு புரட்டாதித் திங்களிலே
சீரார் அமாவாசைச் சேர்நாளில் – பேரார்
தவமணி யம்மையார் தானுந் துதித்தே
சிவன்தா ளிணைந்தார் சிறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிள்ளையார் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக் கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்பார் தமக்கு

## தேவாரம்

### திருமுறை 1

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளம்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறை 2
## (திருக்கேதீச்சரப் பதிகம்)

விருது குன்றமா மேருவி னாணர
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

## திருமுறை 3
## ( திருக்கோணேச்சரப் பதிகம் )

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருமுறை 4

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறை 5

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

## திருமுறை 6

ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப்பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடிஎன் மேல்வைத்தாய் நீயே
தேசவிளக்கெல்லா மானாய் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதி.

## திருமுறை 7

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
—டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேலெ்ன லாமே.

## திருமுறை 8
## (திருவாசகம்)

சீரார் பவளங்கால் முத்தங்கயிறாக
வேராரும் பொற்பலகை யேறியினிதமர்ந்து
நாராயணனறியா நாண்மலர்த்தாணாயடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
யாராவமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார் வேற் கண்மடவீர் பொன்னூஞ்சலாடாமோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறை 9
## திருவிசைப்பா

ஒளி வளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு (சேந்தனார்)

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்ப
லமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமுறை 10
## திருமந்திரம் (திருமூலர்)

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடையோனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறை 11
## திருமுருகாற்றுப்படை (நக்கீரர்)

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## திருமுறை 12
## பெரியபுராணம் (சேக்கிழார்)

இறவாதஇன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவா நீஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பாதிமதிநதி போதுமணிசடை நாதரருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுற அருள்மாளனரிதிரு மருகோனே
காலனெனை அணுகாமலுனதிரு காலில்வழிபட அருள்வாயெ
ஆதிஅயனொடு தேவர் சுரருலகாளும் வகையுறு சிறைமீளா
ஆடமயிலினிலேறி அமரர்கள் சூழவலம்வரும் இளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரிசுவரிட வேலைவிடவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தவமணியம்மா துரையையா அவர்களது வாழ்க்கைப் பதிவுகள்

| | | |
|---|---|---|
| தாய் | – | கணபதியார் மகள் வள்ளியம்மை |
| தந்தை | – | வேலுப்பிள்ளை நாகலிங்கம் |
| பிறப்பு | – | 26 – 11 – 1925 மூத்தபிள்ளை தவமணியம்மா |
| 1945ல் | – | கணபதியார் துரைஜயாவை (ஆசிரியர்) மணமுடித்துக் கண்டி சென்றார். |
| 1950ல் | – | மூத்தபிள்ளை கமலாம்பிகை பிறப்பு |
| 1952ல் | – | தேவநாயகி பிறப்பு |
| 1961ல் | – | தனவதி பிறப்பு |
| 1965ல் | – | ஏக புத்திரரான கணேஸ்வரன் தோற்றம் |
| 1972ல் | – | கண்டியிலிருந்து சொந்த ஊரான சிந்துபுரம் வந்தனர் |
| 1973ல் | – | கந்தசாமி அன்னலட்சுமி தம்பதிகளின் கடைப் புத்திரனான ஸ்ரீ பஞ்சநாதன் அவர்களுக்கு தமது கனிஷ்ட புத்திரியை மணமுடித்து வைத்தார். |
| 1975ல் | – | முதலாவது பேர்த்தியான காயத்திரியைக் கண்டு மகிழ்வுற்றார். |
| 1978ல் | – | முதலாவது பேரனான பார்த்தீபனைக் கண்டு உவகையுற்றார். |
| 1978ல் | – | கணவன் பிரிவு |
| 1980ல் | – | பேர்த்தி அனிதா தோற்றம் |
| 1984ல் | – | சதாசிவம், பூரணம் தம்பதிகளின் மூன்றாவது புதல்வனான காவல் துறை உத்தியோகத்தர் அருணகிரிநாதன் அவர்களைத் தனது இரண்டாவது புத்திரியான தேவநாயகிக்கு மணம் முடித்து வைத்தார். |
| 1985ல் | – | பேர்த்தி தனுசலா தோற்றம் |
| 1986ல் | – | பேர்த்தி மனோசலா தோற்றம். கந்தசாமி பொன்னம்மா தம்பதிகளின் ஆறாவது பிள்ளையான இரங்கநாதர் அவர்களுக்கு கடைப் புத்திரியான தனவதிக்கு மணம் முடித்து வைத்தார். |
| 1988ல் | – | பேர்த்தி பவித்ரா தோற்றம் |
| 1989ல் | – | பேர்த்தி ரம்சினி தோற்றம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990ல் – மகள் விஞ்ஞானமாணிப் பட்டதாரியான காட்சியை கண்டு பூரிப்படைந்தார்.

1991ல் – அருளாளன் தோற்றம்
கந்தசாமி நாகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகளான அஜந்தினியை தமது ஏக புத்திரனான கணேஸ்வரனுக்கு மணமுடித்து வைத்தார்.

1994ல் – கணேஸ்வரன் அஜந்தினி தம்பதிகளின் புத்திரியும் தன் மகன் வழிப் பேரனுமான கிரிசாந்தியைக் கண்டு உவகையுற்றார்

1996ல் – பேரன் புவிதரன் தோற்றம்..

1997ல் – மூத்த மகள் கமலாம்பிகையின் பிரிவால் துன்புற்றார்.
மகனின் மகனான மகன் வழி இரண்டாவது பேரனான குகவேள் அவர்களைக் கண்டு இன்புற்றார்.

2000ல் – முதற் பேர்த்தியான காயத்திரியின் திருமணத்தைக் கண்டு அகமகிழ்ந்தார்.

2001ல் – முதற் பீட்டப்பிள்ளை தோற்றம்.

2002ல் – பேரன் லோகீசன் தோற்றம்.

2003ல் – இரண்டாம் பீட்டப்பிள்ளை நிமிலியா தோற்றம்
பேர்த்தி அனிதா திருமணம்
கனடா சென்று தன் புத்திரனையும் மருமகளையும் பேரன் பேர்த்தியையும் கண்ணாரக் கண்டு உவகையடைந்தார்.

2005ல் – தன் இன்னுயிரை நீத்தார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த நாட்கள் மீள வந்திடுமோ...

அம்மா !

உங்களுக்கு ஆத்ம நிலையில் ஏற்பட்ட ஒரு மாற்றம்

எங்களுக்கு அது பெரும் பிரிவுத் துயரம்

கண்டி நகரிலே களிப்புடன் கழிந்த

காலங்கள் கடந்து போயின

கணவனை இழந்த பின்னும்

கடமையில் கருத்துடன்

கழித்த நாட்களும் கடந்து போயின

பேரப்பிள்ளைகளைப் பெருமதிப்புடன்

பேணி வளர்த்து

வாழ வைத்த நாட்களும் கடந்து போயின

மூத்த மகளை இழந்து மூழ்கிய துயரமும்

காலத்தின் கைகளில் கடந்து போயின

கனடா வந்து களிப்போடு பேரப்பிள்ளைகளுடன் பேசி

மகிழ்ந்த காலங்கள் கடந்து போயின

இன்று ஒரு புதிய அத்தியாயம்

எங்கோ ஆரம்பித்து விட்டதென்ற

நம்பிக்கையுடன் உங்கள்

நினைவுகளைச் சுமந்து

– மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் –

( கனடா )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் உங்கள் சுவடுகளை நோக்கி

உங்கள் நினைவுகளில்
நிஜத்தை இணைத்து
நிம்மதியை இழந்து தவிக்கின்றோம்
இழப்புக்களை எத்த மனமும்
எளிதில் ஏற்று விடுவதில்லை
துயரங்கள் மட்டும் வாழ்க்கைப்
பக்கங்களை நிரப்பக் கூடாது
என்ற உங்களின் தத்துவம்
எங்களை ஒருமுறை
எழுந்து நிற்க வைக்கின்றது.
நேற்றைய நாட்களில் கிடந்த மனம்
இன்றையில் நிற்க மறுக்கின்றது.
சகோதர பாசத்தில் ஒரு
சரித்திரம் படைத்துக் காட்டியதும்,
சந்ததியைப் பற்றி சந்தர்ப்பம்
வரும்போதெல்லாம் விளக்கியதும்,
உறவுப் பாலத்தின் உன்னதத்தை
என்றும் விளக்கி விளம்பியதும்,
இறுதி நாட்களில் இறை நம்பிக்கையுடன்
தேவார திருவாசகங்களைப் பாடிக் களிப்புற்றதும்
சமயம் – வாழ்வின் ஒரு பகுதியென
எடுத்துக் காட்டி எமக்கு விளக்கியதும்
காலத்தால் மறக்க முடியுமோ!
காலச் சக்கரம் எங்களைக் கதிமாற்றிச் சென்றாலும்
உங்கள் வாழ்வின் சுவடுகளைத் தொடர்ந்த
வண்ணம் .................

– பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக்கூத்தும் சிந்துபுரமும்

### அறிமுகம்

கூத்து என்பது குதித்தும் அசைந்தும் துள்ளியும் பாவனை செய்து ஆடும் பழந்தமிழர் நாடகக் கலை வடிவம் ஆகும். இந்நாடகக் கலை வடிவம் ஆனது சிந்துபுரத் தீரர்களாகிய நம்மூர் மக்களின் தொன்மை வரலாற்றை உணர்த்தும் கலைவடிவமும் ஆகும். அவ்வழி வந்த நம்மவர் சிந்துவெளிச் சீர்மையினை உணர்த்தும் இக்கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். இவர்கள் வட்டுக் கோட்டைத் தொகுதியின் சில பகுதிகளான அராலி, காரைநகர், சித்தன்கேணியின் ஒரு பகுதியான கலைநகரிலும் ஊர்காவற்துறைத் தொகுதியின் ஒரு பகுதியான பருத்தியடைப்பு, தம்பாட்டி போன்ற இடங்களிலும் வதிந்து உறையலாயினர். அவர்களிற் பெரும்பான்மையோர் வட்டுக்கோட்டையின் ஒரு பகுதியான சிந்துபுரத்திலும் வாழ்வராயினர். அதனால் அவர்களைச் சிந்துபுரக் கலைஞர்கள் எனப் பாராட்டுவராயினர்.

''சீதக் கடலின் பரப்பெல்லாம்
தெளியக் காணும் நிலவைப் போல்
கீதக் கடலின் அலைதாங்கித்
திமிலம் ஓட்டி வாணிபத்தால்
மேதைச் சிந்துபுர மென்ன
விளங்கும் இந்தப் பதிவாழும்
ஆதி யினத்தின் வழித்தோன்றல்
அகல உரைக்கும் பெருங்கலைஞர் ......''

எனச் சுட்டும் சான்றோரின் பாடல் ஒன்று என் நினைவுக்கு வருகின்றது.

இவர்களில் பெரும்பான்மையோர் சுயதொழில்களைச் செய்தும் ஏனையோர் அரச உத்தியோகம் பார்ப்பவராகவும் விளங்கினர். அதனை உணர்த்தும் வகையில் இவ்வாறு கலைத் தொழில்களில் ஈடுபடும் போது தமது வேலைக் களைப்பை நீக்குமுகமாயும், பொழுது போக்காகவும் கூத்துப் பாடல்களைப் பாடியும் ஆட்ட வடிவங்களை வெளிப்படுத்தியும் மகிழ்ந்தனர்.

இவ்வாறு இவர்கள் ஆடும் பொழுதும் பாடும் பொழுதும் அவர்களின் வழிவந்தவர்கள் கலாரசிகர்களாகிக் கலைநுட்பங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்து கொண்டனர். அதனால் இக்கலை இக்காலச் சிந்துபுரத்தோர்க்கு தனிச் சிறப்பைத் தருவதாயிற்று. இங்கு ஆடப்படும் பெரும்பான்மையான கூத்துக்கள் சமயச் சார்புடையனவாகவும் புராணச் செய்திகளைப் பின்னணியாகக் கொண்டவைகளாகவும், சிறப்பாக இதிகாசக்கிளைக் கதைகளைப் பாடுபொருளாக அமைத்தும், கருப்பொருளாகக் கொண்டும் கூத்துக்கலையை வளர்த்தார்கள்.

கூத்துக்கள் வர்க்க பேதத்தினை வேறுபடுத்திக் காட்டும் முறைமையில் கூத்து வகைகள் இருப்பது வேதனைக்குரியதாகும். உதாரணமாக பல தெய்வ வழிபாடுகளை எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு பிரிவினருக்கு இருப்பதை நோக்கலாம். இது போல அம்மனை வழிபடுபவர்கள் ''ஆத்தாளைத் தேடியெல்லோ...........'' என்ற பாடலைப் பாடி ஆடும் "சிந்துநடைக் கூத்தை" ஆடுபவர்கள் ஒருபகுதியினரும், "ஞானசௌந்தரி" இசை நாடகத்தை ஆடுபவர் ஒரு பகுதியினரும், "வெடியரசன்" நாடகத்தை ஆடுபவர் ஒரு பகுதியினருமாகப் பேசப்பட்டனர்.

"கூத்தும் பாட்டும்" தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துவதாகும். அதனால் மரபுசார் சடங்குகளாக – தொன்மைக் கலைகளாக அதாவது பாரம்பரியக் கலைகளாகக் கருதிக் காத்துவரும் கலைப் பொக்கிஷமாகப் பேணப்படுகின்றது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆடப்படும் கூத்துக்கள் அவ்வவ் பிரதேசப் பாங்கை வெளிப்படுத்தும் தன்மைகளையும் நாம் அவதானிக்க முடியும். அவற்றுள் ஆட்ட முறைமைகளும் பாடப்படும் முறைமைகளும் பக்கவாத்திய முறைமைகளும் வெவ்வேறாக அமைவதையும் அவதானிக்கலாம். பொதுவாகக் கூத்துக்களுக்கு மத்தளம் வாசிப்பதே சிறப்பானது.

மலையாளம் எனக் கூறப்படும் கேரளாவில் ஒரு "கதகளியும்" ஒரிசாவிலொரு "ஒடிசியும்" தமிழ் நாட்டின் மெலற்றோன் கிராமத்திலொரு "பாகவத மேளாவும்" ஆந்திராவிலொரு "வீதிநாடகமும்" வட இந்தியாவிலொரு "ராம்லீலா", " கதக்" நாடகங்களும் பீகார் மாநிலத்தில் செனரத்கெல்லாவில் "ச்சாவ்" நாடகமும் குஜராத்திலே சௌராஸ்ரா மாநிலத்தில் "ரஸ்லீலா" நாடகமும் , அஷாம் மாநிலத்தில் "மணிப்புரி நடனமும்" பஞ்சாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜஸ்தான் உத்தரப் பிரதேசம் ஆகியவற்றில் "நௌதங்கி" நாடகமும் தென்னிந்தியாவிலொரு " தெருக்கூத்தும்" தென்னிலங்கையில் "கண்டிக் கூத்தும்", தமிழீழத்திலே "நாட்டுக் கூத்துமாக" அமைந்திருக்கிறது. மலையகத்திலே "அருச்சுனன் தபசு", "காமன் கூத்து", "பொன்னர் சங்கர்" என்பனவும், முல்லைத்தீவிலே "கோவலன் கூத்துமாகவும்" , மன்னாரில் "வாசாப்பு நாடகமும்" மட்டக்களப்பில் "வடதென் மோடிக் கூத்தும்" காணப்படுகின்றது.

கூத்தின் பதிவுகள் ஆனது பல தலைமுறைகளைக் கடந்து இன்னும் எழுதப்பட்டுக் கொண்டு இருக்கக்கூடியதைக் கண்கொண்டு பார்க்கக்கூடியதாயுள்ளது இதன் சிறப்பு அம்சமாகும். இம்மக்களின் வாழ்வோடு இக்கூத்தானது அதன் இயைபுக்கேற்ற வகையில் வேரூன்றிற்று எனச் சொல்வது மிகையாகாது. ஏனெனில் கூத்துக்கள் ஏனைய நாடகங்கள் போலல்லாது பழமை போற்றும் பண்பினைத் தன்னகத்தே கொண்டு இன்றும் அதன் பூர்வீகத் தன்மையைப் பேணி நிற்கின்றது. விளங்கக் கூறினால் இது பழைய வடிவத்திலிருந்து அதிகளவு மாற்றத்தினைக் கொண்டிருக்காததாக இன்னும் பல மேடைகளில் ஆடலாக நிகழக் கண்டு அனைவரது பாராட்டுக்கும் இரசனைக்கும் உரியதாக இருக்கின்றது. சிறந்த பாத்திரப் பொருத்தமும் பல சந்த முறைமைகளில் அமைந்த பாடல்களும், விருத்தங்களும், ஆடல் வடிவங்களும், சபை விருத்தங்களும் இதன் கலையம்சத்தினை வெளிக்கொணர்கிறது.

இக் கூத்தானது இவ்வாறு வெளிப்படக் காரணம் என்னவென நோக்கின் இந்தப் பிரதேசத்து மக்களின் கலையார்வ உணர்வே முதன்மைக் காரணமாகும். பலமுறை ஆர்வ மிகுதியினால் பார்க்க நேர்வதால் காட்சிகளை மனதில் இருத்த முடிகின்றது. இது வேண்டத்தக்கது, இது வேண்டத் தகாதது என்றெல்லாம் விமர்சிக்க முடிகின்றது. மேலும் இந்தப் பாடலை நீங்கள் ஏன் சேர்க்கவில்லை என வினவுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. இது மக்கள் கூத்தின் மீது வைத்திருக்கின்ற பரிச்சியத்தைக் குறிக்கிறது. இந்தப் பிரதேசத்து மக்கள் அதாவது சிந்துபுரம் வாழ் மக்கள் கூத்தினை அன்றிலிருந்து இன்று வரை விளையாடுதல், என்றே அழைப்பார்கள். மனித வாழ்வில் கல்வி, விளையாட்டு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அந்த வகையில் கூத்தை விளையாடுவதாக இவர்கள் பயன்படுத்திய இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கானது இம்மக்களின் கூத்தார்வமானது செழுமையாய் உயிர்த்துடிப்பாய் மிளிர வைத்ததற்கும், தொடர்ந்து அதன் பேணுகை செய்தமைக்குக் காரணம் ஆகியமையும் கலையார்வத்திற்குச் சான்று பகிர்கின்றது. இயல்பான இக் கலையுணர்வும் தரிசனமும் இவர்களைக் கலைஞர்களாக்கியது. எழுத்துருவம் பெற்றுப் பூரணமான இலக்கியமாக இக் கூத்து அமைய அதன் கதைப் பின்னல் ஏதுவாக அமைகின்றது. . இங்கு ஆடப்பட்டுவந்த கூத்துக்கள் வடமோடிக் கூத்துக்கள், தென்மோடிக் கூத்துக்கள், விலாசக்கூத்துக்கள், தெருக்கூத்துக்கள் என அமைகின்றன, அவற்றுள் குருஷேத்திர நாடகம், விராட நாடகம், இந்திரகுமார நாடகம், பப்பரவாகன் கூத்து, தர்மபுத்திர நாடகம், இராம நாடகம் ஆகிய நாடக வகைகள் கூத்தாக ஆடிக் காண்பிக்கப்பட்டு வந்ததனையும், பாரம்பரியக் கலையை இங்கு புதுப்பொலிவுடன் அழியவிடாது கட்டிக்காத்து வருகின்றமையையும் உணரமுடியும். மேலும் இரத்தத்தோடு இரத்தமாகி இக்கலை கலந்து விட்டதாலேதான் இது பாதுகாக்கப்பட்டு பேணப்படுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இதன் ஆட்ட வகைகளாக அடந்தை, தீர்மானம், துரிதம், சச்சை, இராசவரவு, பாஞ்சாலமட்டியம், நான்கடித்தளம், எட்டடித்தளம் எனப் பலவகைப்படும். போரின் மூலம் வெற்றிவாகை சூடித் தர்மம் வெல்லும் என்ற உண்மையையும் அதர்மம் அழியும் என்ற தன்மையையும் வலியுறுத்துவதாக இதன் இலக்கு அமையும்..

கூத்துக்களை வெறும் இரசனை நோக்காகவோ, பொழுதுபோக்காகவோ ஆடாமல் ஒரு இலட்சியத்தை வெளிப்படுத்தும் இலக்கியப்பாங்கிலும் ஆடிவருவதைக் காணமுடியும். அதன் குறிக்கோளாகக் கற்பு, உண்மை, நீதி வழுவாமை போன்ற நெறிகளை மக்கள் மத்தியில் நிறுத்துவதற்கும் இக்கூத்துக்கள் வழி சமைக்கின்றன.

வரவினிலே முக்கியமாக அடந்தையுடன் வருதல், துள்ளிவருதல், என்பன உண்டு. அடந்தையுடன் வருகை தருவது பொதுவாக இராசவரவுக்கே அமைந்து காணப்படும். துள்ளிவருதல், வீமன் வரவு, சடாசுரன் வரவு, அருச்சுனன்வரவு, கட்டியக்காரன் வரவு போன்ற தனி வரவுக்கும் வேறு இதர வரவுகளுக்குமாக அமைவுற்றுக் காணப்படும். மத்தள இசைவுக்கேற்ற வகையில் அதன் தாளத்தினை விழுத்திப் போடுதல் இன்னொரு வகையானது. வட்டக்களரியின் தன்மையில் இது உற்பவித்ததனால் வட்டமான துரிதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளல்களோடு சுற்றிப்பின் அவ்வாறு இருதடவை வட்டத்தின் தன்மைக்கேற்றவாறு ஆடிய பின் தீர்மானத்தோடு முடிவடையும். இது சபை விருத்தம் பாடிய பின் குறிப்பிட்ட பாத்திரத்திரத்தின் வரவு அறிவிக்கப்பட்டு மேற்கூறிய ஆடல் நுட்பங்களின்பின் ஆடற்தரு பாடப்படும். பாடற்தன்மைகள் நிறைந்ததாகவும் மத்தளம், தாளம் ஆகியவற்றின் துணை கொண்டு ஆடற்தரு அமைந்திருக்கும். கூத்தாட்டத்தின் ஆரம்பத்தில் பிள்ளையார் துதி மத்தளத்தில் அடிக்கப்படும். அதன்பின் கூத்துக்கான விநாயகர் காப்பு பாடப்படும். அதையடுத்து சபைவிருத்தம் பாடப்படும். இச்சபை விருத்தத்தில் யார் வரப்போகிறார் என்ற கதை சொல்லப்பட்டு, யார் வருகிறார் என அண்ணாவியார் பாடுவார். பாடப்படும் பாட்டுக்களுக்கு ஏற்ற வண்ணம் இயல்பாகவே ஆடலும் இசையும் சேர்ந்து வரும்.

ஈழவள நாட்டின் மணிமுடியான யாழ்ப்பாணத்தின் மணியாகத் திகழும் வட்டுக்கோட்டையின் சிந்துபுரமானது அதன் வரலாற்று அடிப்படையில் பார்க்கின்ற போது இங்கு வாழும் மக்கள் ஆரம்ப காலத்தில் பாய்க்கப்பல்கள், வத்தை போன்றவை கொண்டு பாரத தேசத்துடன் குறிப்பாகச் சிந்துநதிச்சிறப்புமிகு மக்களுடன் வாணிபம் செய்து வந்தவர்கள் என்றும் அறியமுடிகின்றது. இதனாலேயே சான்றோர் வழக்கில் பின்வரும் பாடல் வந்து நடைபயில்கின்றது.

"சிந்து வெளியிடை வாழ்ந்த
        திரா விடர்கள் புலம்பெயர்ந்து
வந்து குடியேறி யிங்கு
        வாழ்வாங்கு வாழ்ந்த ரலால்
சிந்துபுர மெனவே ஏத்தும்
        சிறப்பு மிதற்குள தெனவே
நந்து புகழ்வர லாற்று
        நல்லறிஞர் நவிலு வரால்"

இத்தொழில் அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதினாலும், நவீன வசதிகள் கொண்ட போக்குவரத்து வசதிகள் வந்தமையினாலும் இவர்களின் இவ்வாணிபம் வீழ்ச்சியடைந்தது. தமது பொருளாதாரத்தைத் திரட்டும் முகமாக மீன்பிடித் தொழிலையும் விவசாயத்தினையும் மேற்கொண்டு வந்தனர். எனவே தான் இங்குள்ள அறிஞர்கள் இங்கு வாழும் மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கம் ஊர்ந்து வருநிதி கொண்டு
தங்கள் வாழ்வைத் தகவுடன் ஓம்பி
பாட்டுங் கூத்தும் ஓவா வட்டூர்"

எனப்புகழ் தேடித் தந்த தொல்குடியிலே பிறந்த தமிழ்ப் பெருங்குடி மக்களாவர் எனக் குறிப்பிட்டனர்.

இங்கு வாழும் மக்கள் நாட்டுக் கூத்துக்கலையிலும் நாட்டார் கலை வடிவங்களான புரவி நடனம், காவடி ஆட்டம் கரகாட்டம், புலிஆட்டம், சிலம்படி, பொம்மையாட்டம், அநுமன் ஆட்டம், பூதஆட்டம், கொழும்பாட்டம், சூரனாட்டம், நடேசராட்டம், தயிர்முட்டி அடித்தலாட்டம் போன்ற கிராமியக் கலைகளிலும் சிறந்து விளங்கினர். இக்கலைகள் யாவும் இங்கு வாழும் மக்களின் பண்பாட்டமிசங்களாக வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனாலேயே சான்றோர்கள் யாழ்மாவட்டத்தில் கூத்துக்குப் பெயர்போன வட்டுக்கோட்டைச்சிந்துபுரத் தினைப் பின்வரும் பாடல் மூலம் பாடியிருக்கிறார்கள்.

தருமபுத் திரனார் கூத்தும்
தகைமலி விராடன் கூத்தும்
மருவுநல் ராமன் கூத்தும்
மாண்குருக் கேத்திர னாதி
பெருகுசீர் விளைத்த நட்டம்
பற்பல பின்னு மாடி
வருமியற் பெயரும் ஏக
வழங்கு பாத்திரப்பேர் கொண்டார்.

இன்றைய காலத்து கவிஞர்களும் சிறப்புமிகு சிந்துபுரத்தினைப் பாடியுள்ளனர். புரவிநடனத்தின் பாடல்களில் ஒன்றில் கவிஞரொருவர் தமது ஊரின் சிறப்பையும் புகழையும் பாடியமை சிறப்பிற்குரியதாகும். இதனைப் பின்வரும் பாடல்களின் மூலம் அறியக்கிடக்கிறது

சிந்துபுரம் இருந்து வந்த சிங்காரக் குதிரை – இது
செந்தமிழர் வாழ்வுதனைச் சீலமுறச் செப்புது பார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள் பிடித்துபோர் புரிந்த வன்னியனின் கதையைக் கூறவா! – இல்லை,
வனப்பு மிகு கலைகள் மலி வட்டூரின் புகழைப் பாடவா
சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த தேசமடா – இது
சரித்திரத்தில் பெயர் பொறித்த பூமியடா!

எய் சிந்துபுரம்.........

பாய்விரித்துக் கப்பல் ஓட்டி வந்தவர் நாம் – இங்கு
பழந்தமிழர் கலைகள் தனைச் சுமப்பவர் நாம்
வங்கக் கடல் மீதிலேறி வாணிபம் செய்தோம் – பல
வர்ணக் குதிரை கொண்டு நாம் இங்கு வந்தோம்

எய் சிந்துபுரம்.........

சிந்துவெளி நாட்டவர்தம் கலைகள் கொணர்ந்தோம் – இங்கு
சீலமுடன் அவற்றினையே செப்புகின்றோம்
செந்தமிழும் சிவநெறியும் ஓங்கிடவே – இந்தச்
சிந்துபுரப் பதியில் வாழும் சீலர் நாம்

எய் சிந்துபுரம்..........

வட்டுக்கோட்டைமோடிக் கூத்துக்களானது சுமார் 250 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இவை பற்றிய கருத்துக்கள் பரம்பரை பரம்பரையாகச், செவிவழிவாயிலாகவும் சில எழுத்துவடிவிலும் வந்தனவாகும் என்பது முன்பே சொல்லப்பட்டவையாகும். இது போன்று கடல் வழி வாணிபத்தில் ஈடுபட்ட மக்கள் தென்னிந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையால் அங்குசென்று வருவதும் தங்கியிருப்பதும் பூர்வீகக் குடியினரான சிந்துமக்களின் கலைகளைக் கேட்டறிவதும் வழக்கம். இன்று கேரளா எனக் கூறப்படுகின்ற சேர நாட்டில் அண்ணாவியார் வேலுப்பிள்ளை (வேலு) என்பவர் தனக்கிருந்த இசை அறிவுடன் தாளக்கட்டு முறைகளையும் ஆட்ட முறைகளையும் அங்குள்ளவர்களின் உதவியுடன் தெரிந்து கொண்டார். இவரே வட்டுக்கோட்டைச் சிந்துபுரக் கூத்து மரபின் முதல் அண்ணாவியார் என்று பெரியோர் கூறுவர். அப்போது முதல் இக்கலை முறையாக வட்டுக்கோட்டைச் சிந்துபுரத்தில் பேணப்படத் தொடங்கியது. அவர் தனது மகன், பேரன் என்கின்ற வம்ச விருத்தியினருக்குப் பழக்கி அதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் முழுப் பொறுப்போடு இருந்தார். அண்ணாவியார் கூத்தை அரங்கேற்ற அவரது உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் போன்றோர் உதவிகள் புரிந்து ஆடுபவர்களாகவும் பங்கு கொண்டனர். இதன் இயல்பும் செழுமையும் இக்காலத்தில் வாழ்ந்த மக்களைக் கவர இக் கலை மிகவும் சிறப்புப் பெற்று விளங்கத் தொடங்கியது. இவ்வாறு அண்ணாவியார் வேலுப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து, அண்ணாவியார் சின்னக் குட்டி, அண்ணாவியார் சரவணமுத்து, அண்ணாவியார் முத்தர் செல்லப்பு, அண்ணாவியார் சீ. வடிவேலு, அண்ணாவியார் முருகுப்பிள்ளை (முருகர்), அண்ணாவியார் நாகலிங்கம், அண்ணாவியார் அமுதலிங்கம், அண்ணாவியார் கலாபூசணம் அ. முருகவேள் என அம்மரபு தொடர்கின்றது.

அவர்கள் ஒவ்வொருவர் பற்றியும் அவர்களது திறன்கள் பற்றியும் பல்வேறு தகவல்களைக் கூறக் கூடியதாக இருந்த போதிலும் அனைவரும் மரபு மாறாது இதனைப் பேணி வந்துள்ளனர் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இன்றுவரை இக் கூத்தில் தாளம், மத்தளம் என்ற வாத்தியக்கருவிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மத்தளம் என்கின்ற வாத்தியத்தினை அண்ணாவியார்களான வேலுப்பிள்ளை தொடங்கி கணபதியார், எல்லைப் பொல்லை சுப்பர், செல்லப்பா, ஆறுமுகம், நடராசா, சுரேஸ்குமார் என்கிற வகையில் பரம்பரையான மரபு தொடர்ந்து வருகின்றது. இதேவேளை வல்லிபுரம், விக்கினேஸ்வரநாதன், குகவண்ணன், கோவையானந்தன் என்கிற வகையிலும் மத்தளம் வாசிக்கின்ற திறன் வளர்ந்து வருகின்றது. இக் கூத்துக்கலையில் அண்ணாவியாருடன் இணைந்து ஆட்டம் பாட்டு முதலியவற்றைப் பழக்கியவர்கள் வரிசையில் திரு. வேலுப்பிள்ளை, திரு. அருச்சுனன் செல்லையர், கனகரத்தினம் ஆசிரியர், திரு. நா. முருகுப்பிள்ளை, திரு. கந்தசாமி, திரு. விஸ்வலிங்கம், திரு. கைலாசபிள்ளை, திரு பஞ்சாட்சரம், கலாபூசணம் க.நாகப்பு, முருகம்மை நாட்டுக்கூத்து நூலின் ஆசிரியர் கலைஞர் நா. புவனசுந்தரம், திரு. வே. தவநிருபசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். வட்டுக்கோட்டைச் சிந்துபுரத்தில் ஆரம்பகாலத்தில் பதிவிரதை விலாசம், அழகேந்திர விலாசம் ஆகிய விலாச நாடகங்களும், இந்திரகுமாரன் குசலவன் போன்ற தென்மோடி நாடகமும் ஆடப்பட்டுள்ளன. அதேவேளையில் தர்மபுத்திர நாடகம், விராட நாடகம் குருக்கேத்திர நாடகம் போன்ற வடமோடி நாடகங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடப்பட்டுள்ளன. ஆனால் தர்மபுத்திரன் நாடகத்தின் வரவுடன் வட்டுக்கோட்டையில் நாட்டுக்கூத்து புத்தூக்கம் அடைந்தது எனக் கூறுவர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தை தத்துவரூபமாக விளக்கி ஆட்டமுறைகளோடு கதையினை விறுவிறுப்பாக நகர்த்தி ஆடிவந்தனர்.

தர்மபுத்திர நாடகம், இராம நாடகம் என்பன மானிப்பாயைச் சேர்ந்த அருணாசல முதலியார் மகன் சுவாமிநாதபண்டிதர் என்பவரால் இயற்றப்பட்டது. இவரது காலப்பகுதி 1765 –1824 வரையாகும். இவர் தான் இயற்றிய தர்மபுத்திரன் நாடகத்தினை எல்லா ஊர்களிலும் வழங்கி ஆடும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்களால் ஆடப்பட்ட முறையும் பாட்டு அமைப்புக்களும் திருப்தி அளிக்கவில்லை. அவ்வேளையில் அவர் வட்டுக்கோட்டைப் பெரும்பகுதியின் மணியகாரராக (உடையார் DRO) விளங்கினார்.

இதனால் சிந்துபுரத்திற்கு அலுவல்கள் நிமித்தம் அவர் வந்தவேளை, கணபதியார் அவர்களால் ஓர் இடத்தில் மத்தள இசை இசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை செவியுற்ற சுவாமிநாதர் அவர்கள் குறித்த வீட்டிற்குச் சென்றார். தன்னுடைய தர்மபுத்திரன் நாடகத்தினைப் பற்றியும் அதன் தாளக் கட்டுப்பாட்டு முறைகளையும் அவருக்கு எடுத்துக் கூறி தனது பிரதியை வரும்பொழுது தருவதாகவும் அதனை ஆடிக் காட்டுமாறும் வேண்டியதாகவும் அதனை ஏற்று அவ் நாடகத்தினை ஆடிப்பழகி மேடையேற்றிய பொழுது சுவாமிநாதபண்டிதர் அவர்கள் அளவு கடந்த பெருமிதத்துடன் ஆடியவர்கள் அனைவருக்கும் தனது பாராட்டையும் பரிசுகளையும் வழங்கியதுடன் தனது பிரதியுடன் வேறுபல கூத்துப் பிரதிகளையும் அவர்களிடமே வழங்கினார் என்கின்ற செய்தியும் செவி வழியாகக் கூறப்பட்டு வந்ததாக வரலாறு உண்டு. இக்கூத்து மெய்ம்மை மரபுக்கு அதன் பாரம்பரியக் கனதியே காரணமாகும். தர்மபுத்திர நாடகம், விராட நாடகம், குருக்கேத்திர நாடகம் என்பவற்றில் வட்டூர்ச் சிந்துபுரத்தின் புலவர்களான சேதுபேரன் என்கின்ற முருகுப்பிள்ளை அவர்களினதும் ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் புகழ்பெற்ற (1882 – 1956) முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி (1896 – 1957) அவர்களினதும் பாடல்களும் சேர்க்கப்பட்டு செம்மைப் படுத்தப்பட்ட கூத்துப்பிரதியாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் பண்பாட்டைத் தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என வகுக்கப்படுவது போன்று, கூத்தையும் அகம் புறமாக இனம் காணலாம். தென்மோடிக் கூத்தில் அகம் சார்ந்த உணர்வுகளே பெரும்பான்மையாகவுள்ளன. வட மோடிக் கூத்துக்களில் புறம் சார்ந்த உணர்வுகளே பெரும்பான்மையாக மேலோங்கி நிற்கும். எமது சிந்துபுரக் கிராமத்தில் (அதாவது வட்டுக்கோட்டைமோடிக்கூத்தில்) சிறந்த வடமோடிக் கூத்துக்களாக இவை விளங்குகின்றன.

வடமோடி, தென்மோடி என வரைவிலக்கணம் செய்தவர்கள் வரவுப்பாட்டை பாத்திரம் பாடுவதாகக் குறிக்கவில்லை. வடமோடிப் பாங்கான கூத்தில் வரவுப்பாட்டை, வரவு ஆட்டத்தின் பின் வரவைக் குறிக்கும் பாட்டை நடிகரே பாடுவதாய் அமைந்திருக்கும். ஆனால் எமது கூத்தில் சபைவிருத்தத்தையும், வரவுப் பாட்டையும் கூத்தை வழிநடத்திச் செல்லும் அண்ணாவியாரே ப்ாடுவார். இது போன்று இன்னும் பல சிறப்புக்கூறுகளும், ஆட்டமுறைமைகளும் இருப்பதனாலேயே எங்களூரில் ஆடப்படும் கூத்தை வட்டுக்கோட்டைமோடி ( சிந்துபுரமோடி) எனக் கூறுவதில் எம்மூரவர் பெருமை கொள்கின்றனர். விருத்தங்களை ஓரளவு நீட்டிப் பாடுதல் முறையைக் கொண்டும், கூத்தர் ஒரு பாட்டைப் படித்தால் பக்கப்பாட்டுக்காரரும் படிப்பதாக அமைந்து இருக்கும். நடிகர் தமது பாட்டு ஆட்டம் என்பவற்றை முடித்துக் கொண்டு போக வேண்டிய நேரம் வந்ததும் துரிதமுடன் அடந்தையை இறுதியாட்டமாகக் கொண்டு செல்வதும் வட்டுக்கோட்டைச் சிந்துபுரமோடியாகும்.

எழுத்துருவில் ஒன்பான் சுவைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது அவசியம். போரின் போது எதிரியாக நடிபாகத்தை ஏற்கும் பாத்திரத்தை நோக்கி கிண்டலுணர்வுடன் பேசும்மரபு இந்தக் கூத்தில் இடையிடையே இழையோடியிருக்கும். இக்கூத்தில் நடிக்கிற நடிப்பு நெகிழ்ச்சியானதாகி நாடகமோ அல்லது கூத்தோ சிறந்து மிளிர்வதற்கு தலையாய பங்கினை இசை, ஒப்பனை என்பனவும் உதவுகின்றன. அந்தவகையில் கூத்தில் ஒப்பனைக்கும் சிறந்ததோர் இடமுண்டு.

எழுத்துருவில் கதை அமையும் போது முரண்பாடுகளும் திருப்பங்களும் செறிந்ததாக அமைந்து நாடக இயக்கமாகின்றதே நாடகக் கதைப்பின்னல் ஆகும். இதிகாசக் கதைகளான இராமாயணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதம் (தருமபுத்திர நாடகம்) ஆகிய கதைகளையும் மகாபாரக்கிளைக் கதைகளான குருக்கேத்திர நாடகமும் விராட நாடகமும் கூத்தாகிச் சிறக்கக் கவர்ச்சியான உரையாடல்களும், பாத்திரங்களின் விநோதமான செய்திகளும் ஒப்பனைக்கான வேட உடுப்புக்களும் பயன்படுத்தப்படும். காட்சிகளின் தன்மைக்கேற்ப இசையொலிகளும் இக்கூத்தில் விரவிக் காணப்படுகின்றன.

படர்க்கையிலே நடிகர் அரங்கிற்கு வரும்போது தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுவருவார் என்றும் பாத்திரமாகி நடிக்கின்ற போது நடிகராகவும் இருக்கின்ற பாங்கு உண்டென்றும்அவதானிகள் கூறுவர்.

ஒப்பனை செய்யப்படும் போது நடிகரது முகமானது ஓவியப் பாங்கின் தன்மைகளைப் பெற்று நுண்கூறுகளை வெளிக்கொணரும். அந்த அமிசங்களும் நிற பேதங்களை உண்டாக்கும் வர்ணப் பூச்சுக்களும் ஒப்பனைக்கு அடித்தளமாகும். இந்த வகையில் இக்கூத்து மரபில் முத்துவெள்ளை, முத்துக்கறுப்பு, ரோஜா நிறப்பவுடர், கிளிசறின் வர்ணப்பூச்சு ஆகியவை கொண்டு பூசப்படும். இதில் ரோஜா நிறப் பொடியுடன் (தூளுடன்) முத்து வெள்ளையைச் சேர்த்து நடிகரது உடம்பு முழுவதும் பூசப்படுகின்றது. முனிவரெனின் தாடி என்பவற்றுடன் சடா முடியையும் சேர்த்து அலங்கரிக்கும் தன்மையை கொண்டதாக அமைந்து இருக்கின்றது. ஆதலால் ஒப்பனை நாடகத்தின் சிறந்த பகுதியாகின்றது. இதே போன்று இசையும் கூத்தின் இன்றியமையாத பகுதியாகும்.

எனவே கூத்திற்கான இசையானது கருமன நிலை பண்பாட்டின் அடித்தளத்தில் நின்று கருத்தைத் தெரிவித்தல் உரையாடலுக்கு அழுத்தம் கொடுக்க உதவுதல் இயக்கங்கள், அசைவுகள் செய்கைகள் என்பனவற்றையும் பாத்திரப்படைப்புக்கு அழுத்தம் கொடுக்கவும் இது உதவிபுரின்றது. ஆடலை விறுவிறுப்பாகவும் தாளக்கட்டு பிசகாமல் இருப்பதற்கும் மத்தளம் வாசிப்பது பெரிதும் துணைபுரிகின்றது. உதாரணமாக துரௌபதியை சடாசூரன் கவர்ந்து கொண்டு போகின்ற சந்தர்ப்பத்தில் இது புலப்படும்.

சுற்றிவரக் கம்பம் நட்டு ஓர் வட்ட வடிவமான அரங்கினை (வட்டக்களரி) உருவாக்குவதற்காக நாட்டப்படும் கம்பத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பிலையைக் கட்டி அதன் சம்பிரதாய பூர்வத்தின் அவசியத்தினை உணர்த்தி நிற்பதோடு மட்டுமல்லாது கூத்தின் முடிவில் அம்மனுக்குரிய பாடல்களை பாடி கூத்தினை ஆடிமுடிப்பர். இது ஓர் நம்பிக்கைகள் வாயிலான ஓர் செயற்பாடாகக் காணப்படுகின்றது. நமது வட்டுக்கோட்டையின் சிந்துபுரப்பதியிலே வரட்சிப்பிணி அதாவது அம்பாள் நோய் வருகின்ற சந்தர்ப்பத்தில் அம்மன் கோபம் கொண்டுவிட்டதாகக் கருதி அம்மனைச் சாந்தப்படுத்துவதற்கு படையல், குளிர்த்தி என்பவற்றினைச் செய்கின்ற ஐதீகம் இம்மக்களிடையே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது கூத்துக்கள் மேடையேற்றம் பெறுவதைக் காணக்கூடியதோடு மட்டுமல்லாமல் வைபவங்களின் போதும் வேறு விழாக்களின் போதும் சிறப்பு நிகழ்ச்சியாகக் கூத்துக்கள் மேடையேற்றப்படுகின்றன. புதிய கூத்துக்களின் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்ற வேளைகளில் ஆரம்ப கால்கோள் நிகழ்வுகளாக பாத்திர ஒப்படைப்பு நடைபெறும். அதாவது அண்ணாவியார் தனது கையால் அம்மன் சந்நிதியில் ஒவ்வொரு கலைஞருக்கும் அவர் ஏற்கும் பாத்திரத்திற்குரிய எழுத்துருப் பிரதியை வழங்குவர்.

இக்கூத்துக்களானது அங்கஅமைப்புக் காட்சிகள் அதிகம் இல்லாது பாவனையை பாடல்கள் மூலமாகவே போர்க்களமும் ,நாடும், பூந்தோட்டமும், அரண்மனையும் என பார்வையாளர் மூளைக்குள் உருவாக்கப்பட்டு இருப்பது இதன் இன்னோர் சிறப்பம்சமாகும். மத்தளம் தாளம் இசைக்கத் தாளக் கட்டுடன் கூடிய ஆட்ட நுணுக்கங்கள் நிறைந்த விறுவிறுப்புமிக்க நாட்டுக் கூத்தாக மக்கள்முன் அளிக்கை செய்யப்படுவதும் அவ்வாறான அளிக்கையின் ஊடாக கதையினை புரிந்து கொள்ள வைப்பதோடு ஓர் இதிகாச உலகுக்குள் அழைத்துச் செல்வதாக ஓர் உணர்வு ஒன்றை ஏற்படுத்துவதாக இக் கூத்து அமைந்திருக்கும். கூத்து என்பது ஆடல் பாடல் மட்டுமல்ல அதனை ஆடும் மக்களும் சேர்ந்து தான் என்ற வட்டுக்கோட்டை சின்னத்தம்பி ஆசிரியரின் கூற்றிற்கிணங்க வட்டுக்கோட்டைச் சிந்துபுர மக்களும் இக்கூத்தோடு ஒன்றித்து விட்டார்கள் என்பது அவர்களின் கலை உணர்விற் புலப்படும்.

கூத்துக்கள் பண்டைய யாழ்ப்பாணப் புலவர்கள் சிலர் இயற்றிய பாடல்களைக்கொண்டு விளங்கின . கலையும் கூத்தும் அவற்றின் பல்வேறு வடிவங்களும் இம்மக்களின் தீரத்தன்மையினைச் சுட்டிக் காட்டுவதாகும். இக்கூத்துக்களில் வெற்றி பெறுதல் என்னும் வித்து ஊடு பொருளாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து கிடக்க அதற்கேற்றாற் போல் கதை அமிசங்கள் வளர்ந்து கிளைத்து கிளையமிசங்களாகிப் பாட்டும் பொருளுமாக நடந்து செல்கின்றன. இக்கூத்தில் போரோடு இணைந்திருக்கும் காட்சிகள் கூத்துக்கு அதியுச்ச விறுவிறுப்பூட்டும் அமிசமாக அமைந்திருக்கின்றன. இவ்வாறான வித்துக்கள் கருப்பொருளாகின்ற அதே வேளையில் கருவுடன் கூடிய வித்து மனவோசை என்னும் விளைமாண்புலத்தைச் சேர்ந்து ஊட்டம் பெற்றுக் கூத்துத் தரத்தை அடைகின்றது. இவ்வாறு கூத்தாகும் போது பாட்டுடன் கலந்த தாளங்களுடனான அசைவுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு தாளக்கட்டுக்கு ஏற்பவும் ஆடும் அரங்கிற்கு அமையவும் ஊடுருவி நிற்கும் சத்தத் தெளிவோடு பாடியாடப் பொருத்தமாக அமைந்திருப்பது வட்டுக்கோட்டைக் கூத்தின் சிறப்பமிசமாகும். கலைஞர்கள் ஆட்டமுறைகளையும்சந்த பேதங்களையும் தேர்ந்ததோடு யாப்பறிவையும் கொண்டவராய் விளங்குதல் இக்கூத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாயிற்று.

இக்கூத்தினை ரசிக்க கலைஞானம் அவசியம். இது இந்த ஊர் மக்களிடத்தே நிறையவே உண்டு. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இங்கு தாளமும் ராகமும் பாவமும் படிந்து ஓர் எழுச்சி நிலையைப் பெற்று விடும். கூத்தாடுபவர்களுக்கும் பார்வையாளர்களுக்கான எமது ஊர் மக்கள் கூத்தோடு ஒன்றிணைந்து பழக்கப்பட்டவராதலினால் விமர்சனம் செய்யக்கூடியளவுக்கு அவர்கள் திறன் பெற்றவர்கள் என்றே கூறலாம். ஆந்த வகையில் கொஞ்சம் குறுக்கி ஆடுங்கள் இடம் போதாமையாய் இருக்கின்றது அடந்தையைச் சிறிதாகப் போடுங்கள் ஆட்ட வீச்சைக் குறைத்து அதன் வடிவத்தையும் அழகையும் கருத்திற் கொண்டு ஆட முனையுங்கள் என ஆலோசனை கூறுபவராகவும் இம்மக்கள் இருக்கிறார்கள். கூத்து சோபிக்கவில்லையெனின் சோபிக்க வேண்டிய அவசியத்தையும் ஒத்திகையின் போது எது சோபிக்கும் இப்படிச் செய்யாதீர்கள் சோபிக்காது எனவும் ஆலோசனை கூறி உற்சாகப்படுத்துவர்.

இக்கூத்துக்கள் ஆரம்பத்திலிருந்து பன்னிரண்டு முதல் பதின் மூன்று மணித்தியாலங்கள் வரையான ஓர் இரவுக் கூத்தாக ஆடப்பட்டது. 1980களின் பின்னர் ஆறு அல்லது ஏழு மணித்தியாலங்கள் வரை ஆடக்கூடியதாக அதன்செழுமை குறையாது சுருக்கப்பட்டது. அதன் பின்னர் தருமபுத்திர நாடகம், விராட நாடகம், குருகேத்திர நாடகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றில் இருந்து இரண்டு இரண்டரை மணித்தியாலங்களுக்கும் ஒன்றரை மணித்தியாலங்களுக்கும் என மேலும் சுருக்கப்பட்டது, இவ்வாறு சுருக்கப்பட்ட நிலையிலேயே போட்டிகள் நிகழ்வுகள் ஆலயவிழாக்கள் என்பன போன்ற தினங்களிலே ஆடப்பட்டு வந்தது. இவ்வாறு ஆடப்படுபவற்றில் அருச்சுனன் தவசு (சிவவேடனும் தவவேடனும்) சடாசூரன் வதை பீமன் அநுமான் போர், சீசகன் வதை, திரௌபதி துகிலுரிதல், மல்லன் மடையன்போர், கண்ணன் தூது என்கின்ற கூத்துக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆடப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெருமைகளையும் பெற்றன.

நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவே இக்கூத்துக்களைப் பேணி வந்தது. இக்கூத்துக்குழு அமைப்பு ரீதியாக 1961 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக்கூத்து கதை செல்கின்ற உத்தியாக கட்டியக்காரனை அறிமுகப்படுத்துகின்றது. காட்சிகளை ஏற்றி இறக்கி விறுவிறுப்பாகச் செல்வதற்கு துரிதப்படுத்துகின்றது. மகாபாரதக் கதையைச் சொல்வதாகத் தர்மபுத்திர நாடகமும் இராமாயணக் கதையைச் சொல்வதாக இராம நாடகமும் காணப்படுகின்றது. ஏனைய கிளைக் கதையான குருக்கேத்திர நாடகமும் அதன் அமைப்பு சார் தன்மையோடு கதையினை நகர்த்திச் செல்கிறது. ஓவ்வொரு கதைகளும் விவரணப் பாங்கிலே அமைந்துள்ளது. இதிகாசக் கதைகளை அடிப்படையாகக்கொண்டே கதை நகர்த்தற் செயற்பாடுகள் இடம்பெறுகின்றது. காண்பியத்தின் அதி உந்நத நிலைக்குக் "கேளும் பிள்ளாய்" போன்ற யதார்தத்தில் உள்ள நல்ல நடையமைந்த உரையாடல்கள் ஆங்காங்கே காண்பியம் சிறக்க உதவுகின்றமை கண்கூடு.

ஒரு நடிகன் பல பாத்திரங்களை ஏற்கின்ற உத்தியும் இங்குண்டு. உதாரணமாக சிவபெருமான் வேடன் போன்ற பாத்திரங்களுக்கு ஒருவரே வருதல் குறிப்பிடத்தக்கதாகும். ஏனைய கூத்துக்களில் காணப்படுவது போன்று ஒரு வேடத்தைப் பல நபர்கள் நடிக்கும்பாங்கு இங்கு இல்லை. விளங்கக் கூறின் காத்தவராயன் கூத்திலே மூன்று அல்லது நான்கு பேர் பங்கு கொள்கின்றதாகவும், கோவலன் கூத்திலே முற்கோவலன் பிற்கோவலன் என்பதைப் போலன்றி இங்கு ஒரு பாத்திரத்தை பலர் ஆடும் தன்மை இல்லை ஒரு பாத்திரத்தை 12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இருச்தாலும் சரி 2 அல்லது 1 ½ அல்லது 1 மணித்தியாலங்கள் என்றாலும் சரி ஒரு நடிகரே ஆடுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பெண் பாத்திரங்களை ஏற்பவர் ஆண்களாகவே காணப்படுகின்றனர். பெண்பாத்திரத்திற்கேற்றதான ஆடலும் தேர்ந்த தலைமுடி அலங்காரங்களுடன் கிரீடங்கள் கொண்டு பாத்திரத்திற்கு உயிர் ஊட்டுவது சிறந்த ஒப்பனையுடன் பெண் வேடமிட்டு ஆண்கள் நடிப்பர் இந்தக் கூத்துக்கலைஞர்களின் கருது அதாவது பெண் பாத்திரமேற்பவர் பெண்ணாக இருந்து நடித்தல் எளிதெனிலும் அது திறமைக்கு எடுத்துக்காட்டாக அமையாது. ஆண் ஒருவர் பாத்திரத்தில் தான் ஒரு பெண் என்பதை மனதிற்கொண்டு நடிப்பவராக இருந்தாலேயே அது உயர்வைக் கொடுக்கும்.

இந்தக் கூத்தினை ஆடிவருகின்ற சமூகத்தினரிடையே பரம்பரையாக வரும் ஒருவர் உதாரணமாக அருச்சுனர் என்றால் அந்தப் பரம்பரையில் வந்தவர்களே அதே பாத்திரத்தை ஏற்று ஆடிவருகின்ற நடைமுறை காணப்படுகின்றது உதாரணமாக பீமன் கந்தர் பகுதி மடையர் பகுதி அநுமான் பகுதி என்ற அடிப்படையிலேயே ஆடி வந்தனர் ஆனால் இப்போது அந்த வழக்கம் இல்லை. இன்றைய நவீன உலகில் நாகரீகம் கருதி கூத்தை ஆடாமல் விடுவதும் கூத்தாடுபவர்கள் வேலை அற்றவர்கள் அல்லது வேலையில்லாதவர்கள் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவுகின்றமையால் கூத்தாட முன்வருபவர்களை அவர்களுக்கு ஏற்ற பாத்திரத்திற்கு போட வேண்டிய நிலை ஏற்படுகின்றது .

கூத்து தொடங்குவதற்கு முன்பு தென் மேற்கு மூலையில் கம்பத்தின் உச்சியில் வேப்பம் பத்தினி கட்டி கன்னிக்கால் நடுவர் ஏனைய எட்டுக் கம்பங்கள் வட்ட அமைப்பில் அமைந்து மாவிலை தோரணம் பூமாலை போன்றவற்றை வட்டக்களரியில் சுற்றி அலங்கரிக்கப் பட்டு மேற்பகுதியை வண்ணக்கடதாசிகளால் அலங்கரிப்பர் கன்னிக்காலுக்கு அருகாமையில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிறைகுடம் வைப்பார்கள் கூத்து ஆடி முடிப்பதற்குரிய செலவுகளை மக்களே தந்து உதவுவார்கள் அதாவது ஒப்பனைக்குரிய செலவுகள் தேனீர்ச்செலவுகள் என்பவற்றிற்காகவே மக்கள் வழங்குவார்கள் ஆலய அறங்காவலர் மகோற்சவ இறுதிநாளில் கூத்தினைப் போடவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கூத்துக்குழுவிற்கு கடிதமூலம் கேட்டால் கூத்துக் குழுவினர் அதற்குச்சம்மதித்து கூத்தாட முன்வருவர்

கூத்தின் தன்மைக்கேற்ப இலக்கிய ஓசைகளைத்தன்னகத்தே கொண்டதாகி காணப்படுகின்ற வெண்பா ஆனது செப்பல் ஓசையைக்கொண்டமைந்தும் அகவல்பா ஆனது அவல் ஓசையைக் கொண்டமைந்தும் கலிப்பா துள்ளற் தன்மை ஓசையை கொண்டமைந்தும் வஞ்சிப்பா தூங்கல் ஓசையைக் கொண்டமைந்தும் விருத்தம் பாத்திரவாய்ப்பின் ஓர்குறிகாட்டியாகத் திகழ்ந்து பலவதமான தாளக்கட்டுக்களால் ஆட்டங்களை ஆடுவர் மூன்றடித்தாழம் வேடனின் ஆட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாயும் பாஞ்சால மட்டியம் கீசகன் வரவு சடாசுரன் வரவு என்பன போன்ற பாத்திரத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாயும்

"செச்சை" ஆட்டம் பெண்கள் தோன்றும் சந்தர்ப்பங்களிலும் ( வேடன் வேடுவச்சி தோன்றும் இடம்) , கொழுந்தாட்டம் (கொழும்பாட்டம் ) என அழைக்கப்படும் ஆட்டவகையானது ஆட்ட நுணுக்கங்களை கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றது இராச வரபு எனப்படும் மன்னர்களின்வரவு ஆனது ஏனைய வரவினைப்போலன்றி வித்தியாசமான தன்மையைக் கொண்டிருக்கும் அதாவது சாதாரண வரவுகள் ஆனது சபைவிருத்தம் பாடியவுடன் துள்ளி காலினை (முழங்காலினை ) நிலத்திலே மத்தள இசைவுக்கேற்ப (மத்தள வாசிப்புக்கேற்ப )

தன்னன்னதன் ..........

என்ற இசைவுடன் "தீந்திங்கு தீந்திங்கு" என்ற மத்தள அடியுடன் விழுத்திப்போட்டு பின்னர் காலினை எத்திப் போட்டபடியே பின் சென்று (தகிடத்தகிட தகிடதகிடத) என்றபடி பின்னர் துள்ளி முன் வந்து பழையபடி அதேநிலையில் தாளவித்தியாசத்துடன் துரிதம் என்று சொல்லப்படுகின்ற (இரண்டுகாலினையும் அணிவகுப்பு முறையில் துள்ளி ஆடல் ) ஆடலினை ஆடி ஒரு சுற்றுச்சுற்றியபின் முதலாவது திசையிலே துரிதமிட்டு ஆடியபின் அதன் சமாந்தர திசையிலே துரிதமிட்டு ஆடியும் பின் பழைய இடத்திற்கு (தீந்தீங்கு தீந்தீங்கு) ஆடுவார்கள் இது சாதாரணமான நடிகர் வரவாகும் இராச வரவானது அடந்தையுடன் சென்று தீர்மானம் இட்டு பின்னர் துரிதம் இட்டு தீர்மானம் போட்டபின்னர் முதற்திசைக்கு அடந்தையுடன் சென்று திசையை அடைந்தவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிதம் போட்டு தீர்மானம் போட்டபின்னர் இரண்டாவது திசைசையினை நோக்கி அடந்தையுடன் சென்று பின்னர் துரிதமிட்டு பின்னர் தீர்மானம்போட்டு முன்னையது போல் அடந்தையுடன் சென்று பழைய இடத்தை அடைந்தவுடன் தீர்மானம் போட்ட பின்னரே ஆடற்றருவுக்கான பாடலிற்கு ஆட்டத்தினை மேற்கொள்ளவர். மேற்குறிப்பிட்ட அடந்தையுடன் தன்னைத்தானே சுற்றி மேடையினையும் சுற்றி வருதல் வேண்டும் என்ற ஆட்ட முறையும் இங்குகண்டு.

ஆட்ட வகைகளில் பாஞ்சாலமட்டயம் என்னும் பெயரில் அமைந்த இவ்வாட்டமானது பார்வைக்கு இலகுவானதாகவே தோற்றங் கொடுத்தாலும் ஆடுபவர் கெம்பீர உணர்வுடன் மிடுக்காக ஆடுவர். நேர்கோட்டில் முன்நோக்கிச் சென்று அதே வேகத்தில் பின்நோக்கியும் வந்து போவர். இராச வரவாட்டமும் ஏனைய நடிகர்களின் வரவுகளும் முறையே வட்டமாகவும் வட்டத்தில் துரிதமின்றியும் அசைவுகளைப் பெறுவர். தாளக்கட்டை எல்லாப் பாத்திரங்களும் அனுசரித்து நடப்பர்.

பாஞ்சால மட்டயம் அண்ணளவாக நாற்பத்தைந்து பாகையளவில் திருப்பங்களைப்பெற்று வட்டக்களரியில் அமைந்த மேடையை அனுசரித்து வரும் ஆட்டமென்பதால் வலப்புறமாகச் சுற்றி வந்து ஆட்டத்தை நிறைவு செய்வர். இவ்வாட்டங்கள் பெரும்பாலும் கீசகன் வரவிலும் சடாசூரன் வரவிலும் அமைந்து இருக்கும். சடாசூரன் வரவு ஆட்டத்தினை நிரப்பும் பாஞ்சால மட்டய ஆட்டம் இருந்த தனாலேயே வட்டுக்கோட்டைக் கூத்தின் பங்களிப்பில் சடாசூரன் வதை பிரசித்தி பெற்றதாகத் திகழ்கின்றது.

பாஞ்சாலமட்டயத்தின் நிலை வடிவமைப்பை மேலும் விளங்கக் கூறின் துள்ளியபடி ஆரம்ப இடத்திலிருந்து முன்னோக்கிச் சென்று பின்னர் பின்னோக்கி வந்து ஆரம்ப இடத்தை அடைந்து பின் முதற்புறமாக முன்னோக்கிச் சென்று மாறா வேகத்துடன் பின்னோக்கி வந்து பின்னர் இரண்டாவத புறமாக முன்னோக்கிச் சென்று பின் இரண்டாவது புறமாக பின் நோக்கி வருதலினை மேற்கொண்டு பாஞ்சால மட்டயத்தை முடித்து வைப்பர். பாஞ்சால மட்டயத்தின் தாளக்கட்டு தீந்தகு தீந்தகு தீந்தகு தீந்தகு தக்க தீந்தகு தீந்தகு தீந்தகு தக்க என்றவாறு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சை ஆட்டத்தை நோக்குகின்ற போது ஏதாவது ஒரு ஆட்ட முடிவில் அசைவோடு காலினை நிலத்தோடு குத்திப் போடுதலினைக் கொண்டதாக அமைந்து இருக்கும். இது வேடனின் ஆட்டமுடிவில் மூன்றடித்தளம் இட்ட பின்னர் போடப்படும். வேறு ஏனைய பாத்திரங்களிலும் காணப்படும் தீங்குந்தா தீங்குந்தா என்ற தாளக் கட்டினைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

அடுத்து கண்ணியை எடுத்து நோக்கின் இது இரண்டு கால்களையும் குத்தி (துள்ளலுடன்) வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அல்லது பின்புறமாகவும் முன்புறமாகவும். ஒற்றைக் கண்ணி என்றால் ஒரு துள்ளலுடன் நகர்வு ஆரம்பிக்கும். இரட்டைக்கண்ணி என்றால் இரு துள்ளலுடன் நகர்வு நகர்வாட்டம் ஆரம்பிக்கும். முன்னைய காலங்களில் ஐந்து அல்லது மூன்று ஒற்றைக் கண்ணியும் பின்னதாக ஐந்து அல்லது மூன்று இரட்டைக் கண்ணியும் ஆட்ட வழக்கில் இடம்பெறுவதுண்டு. கண்ணியின் தாளக்கட்டானது ஒற்றைக் கண்ணியென்றால் தத்துமி தத்துமித்தாங்கு எனவும் இரட்டைக் கண்ணி எனின் தத்துமி தத்துமி தத்துமித் தாங்கு என்றவாறு அமையும்.

அடுத்து போர்க் காட்சியிலே பெருமளவாக ஆடிக் காண்பிக்கப்படும் தீந்தாங்கம் பொறித்தட்டம் என்ற ஆட்டம் சுவைஞர்களை ஈர்க்கக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் குறிப்பிட்ட போர்க்காட்சியின் முடிவில் குறிப்பிட்ட ஆட்டத்தினைத் தொடர்ந்து வலக்காலினை ஒரு பக்கப்பார்வையாக இட்டு பின்னர் இரண்டு நுனிக்கால்களையும் நிலத்தோடு குத்தி பின்பு நுனிகுதி இரண்டையும் சேர்த்துக் குத்துதல் ஒருகாலினை பூர்த்தி செய்தலையும் மாறாக இடக் காலினை ஒருபக்கப் பார்வையாக நுனிக்காலினை நிலத்தோடு குத்தி பின்னர் இரண்டு கால்களையும் நுனிக் கால்களையும் குத்தி முடித்து பின் தனியே பொறித்தட்டம் என்று சொல்லப்படுகின்ற உட்புறமாக குத்துதலோடு நிறைவடையும். இதன் தாளக்கட்டு தீந்தாங்கு தகத்தீங்கு என்றவாறு அமையும்.

வீமன் வரவிலே துள்ளி ஆடிய பின்னர் வெளிப்புறமாக பொறித்தட்டம் போடுவது போல இரண்டு அல்லது மூன்று முறை ஆட்டத்தினை மேற்கொள்ளவது இக்கூத்திலே காணப்படுகிறது. நுனிக்காலைக் குத்தி பழையபடி வைத்தல் ஆகிய செயல்வடிவை மேற்கொள்வதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும். தீங்கு தீங்கு என்ற தாளக்கட்டு அமைந்த முறையிலேயே இவ்வாட்டமானது ஆடப்படும். வீமன் வரவிலே வீமனின் ஆண்மையை நிரூபிக்கும் வகையில் மீசையினை முறுக்கியபடி காலினை பாடலின் போக்கிற்கேற்ப அமைய தூக்கி எத்தி வைத்தலும் இங்கு இடம் பெறுவது குறிப்பீடத்தக்கதாகும்.

இராச வரவைத்தவிர மற்றைய எப்பாத்திரமாயினும் அதில் ஏனைய சாதாரண வரவோடு இணைவுற்றே எவ்வாட்டமும் அமைவுற்றிருக்கும். உதாரணமாக கீசகன் வரவினிலே முதல் சாதாரண வரவினதாக அமைந்து பின்னரே பாஞ்சால மட்டய ஆட்டமுறை காணப்படுகின்றது. சடாசூரன் வரவிலே கதாயுதத்தை நிலைக்குத்தாகவும் தலைகீழாகவும் ஊன்றி மத்தள அடிக்கேற்க முதலில் வலப்புறமாகவும் பின்னர் இடப்புறமாகவும் அரைவட்ட வடிவமைப்பில் காணப்பட்ட நிலையிலே காலை நகர்த்தி வைக்கின்ற தன்மை வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்திலேயே காணப்படுகின்றது. கதாயுத்தத்தை நிலத்தில் ஊன்றிய பின்னர் இரண்டு கைகளாலும் கதாயுதத்தை தலைகீழாகப் பிடித்தபடி பின்புறமாக ஆடியபடி நகர்ந்து சென்று பின்னர் முன்புறமாக ஒரு அதீத வேகத்துடன் தலைகீழாகப் பிடித்த கதாயுதத்தை தோளுக்கு மேலாகப் பிடித்தாடுகின்ற போது பார்ப்பவர் கண்களை கவருகின்ற வகையிலே அமைந்திருக்கும்.

பாஞ்சால மட்டயத்தின் தாளக்கட்டாக தத்துமி தத்துமி தத்துமி தாங்க என்ற நான்கடித் தாளமாக அமைந்து இருக்கும். இவ்வாறான தன்மை முன்பு குறிப்பிட்டதைப் போன்று கீசகன் சடாசூரன் ஆகிய பாத்திரங்களை அலங்கரிப்பதாக அமைந்திருக்கும். கண்ணி ஆட்ட முறையை எடுத்து நோக்கின் அதன் தாளக் கட்டாக தாங்கு தத்தக தாங்கு தத்தக என்ற ஒற்றைக் கண்ணியும் தத்துமி தத்துமி தத்துமித் தாங்க என்ற இரட்டைக்கண்ணியும் வீமன் கிங்கிரன் வேடன் அனுமான் போன்ற பாத்திரங்களின் ஆட்ட முறையிலே காணப்படுகின்றது. செச்சை என்ற ஆட்ட முறையின் தாளக்கட்டாக ததிங்தக்க ததிங்தக்க ததிங்தக்த் ததிங்தக்க என்பதமைந்து காணப்படுகின்றது. வேடன் வேடுவிச்சி சடாசூரன் திரௌபதி சுபக்கனை என்ற பாத்திரங்களிலே அமைவுற்றுக் காணப்படுகின்றது. சடாசூரன் திரௌபதியை நெருங்கி பலவந்தப்படுத்த முனையும் போது இவ்வாட்டமானது ஆடிக்காட்டப்படும் போது சுவையானதாக அமைந்து இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீமன் வரவிலே முன்பு குறிப்பிட்டது போன்று வெளிப்புறமாக காலினைக் குத்திப் புரட்டல் இக்கூத்தினிலே காணப்படுகின்றது. இதன் தாளக்கட்டாக தாங்கு தத்தக அமைந்துள்ளது. சித்தப்பா மெட்டு எனப்படும் மூன்றடித்தாளமானது சிவபெருமான் அருச்சுனன் நகுலன் சகாதேவன் ஆகிய பாத்திரங்கள் ஆட்டத்தினை ஆடியபடி மேடையை வட்டமாகச் சுற்றிவரும் நிலையினைக் காணலாம்.

எவ்வாட்டத்திலும் துரிதம் இணைந்தே காணப்படும் உதாரணமாக இத்துரிதம் என்று அழைக்கப்படுகின்ற ஆட்டமானது இராசவரவிலும் ஒவ்வொரு பாத்திரங்களின் ஆட்டமுடிவிலும் அமைந்து காணப்படும். இத்துரித ஆட்டத்தினை தத்தங்குது தத்தங்குது என்ற தாளக்கட்டே பிரதிநிதித்துவப்படுத்தும். நாலடித் தாளத்தினைக் கொண்ட ஆட்டமானது தர்மர் வேடன் வேடுவிச்சி ஆட்டம் ஆகியவற்றிலே காணப்படும். இவ்வாட்ட முறையானது முதலில் வலப்புறக்காலை இருமுறை நிலத்துடன் குத்திய பின்னர் தீர்மானம் இடுவது போன்று வலப்புறக்காலை மீண்டும் ஒருமுறை நிலத்துடன் குத்தி பின் நகர்த்தி வைத்து இடக்காலை நிலத்துடன் குத்தியும் பின்பு வலக்காலுடன் குத்தி முடித்தலுமே இதுவாகும். இதன் தாளக்கட்டானது தாம் தரிகிட தீம் தீம் தாம் தாம் தாம் தாம் தரிகிட தீம் தீம் தாம் என்றவாறு அமையும்.

வட்டுக்கோட்டைக் கூத்து மரபிலே முன் வழக்கிலிருந்த விலாசக் கூத்தும் சிறப்புடையதாக அமைகின்றது. இவ்விலாசக் கூத்துக்களிலே முக்கியமானதாக ஆடப்பட்ட கூத்துக்களாக மார்க்கண்டேய சரித்திரம், வலைவீசி புராணம், பவளக்கொடி, அல்லிஅர்ஜீனா, ஸ்ரீவள்ளி, அதியரசன் ஆகியவை அமைந்துள்ளன. இக்கூத்தினிலே பபூன் எனப்படுகின்ற கோமாளிப் பாத்திரமானது இடையிடையே வந்து கலகலப்பினை ஊட்டுவதாகவே செயலியக்கம் அமைந்திருக்கும். திரை மறைவிலிருந்து ஒரு நடிகன் முதன் முதலில் வரும் போது பாட்டின் சிறுபகுதிகளை பாடி அரங்கில் தோன்றுவார். உதாரணமாக "குகசரவணபவ சிவபாலா" என்னும் பாடலினை சிவபாலா என அனுபல்லவிரையப் பாடிய பின்பு பல்லவியான குகசரவணபவ எனப்பாடும் முறைமை இங்கு காணப்பட்டது. அந்நாளில் விலாசக் கூத்தாடிய அண்ணாவியார் முருகர் சந்திரகாந்தா அரசன் பாத்திரத்தில் தோன்றி மக்களின் பாராட்டைப் பெற்றவராகத் திகழ்ந்தார். அவர் உண்மையிலேயே பேரழகுடனும் முகபாவனையுடனும் மிக்க வசீகரமாகத் தோன்றி மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவரென்றும் இன்றும் இக்கூத்தினைப் பார்த்தவர்கள் கூறுகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்களின் வடிவங்களாக தெருக்கூத்து , நாட்டுக்கூத்து விலாசம் கரநாட்டுக்கூத்து என்பன விளங்குகின்றன.இதிலே விலாச வடிவமும் தென்மோடிக் கூத்து வடிவமும் ஒத்த சாயலைக் கொண்டதாக அமைந்து உள்ளது. அதிலே ஆடப்பட்ட தன்மையினையும் அடிப்படையினையும் கொண்டு விலாசக் கூத்தானது மை

அதிலே ஆடப்பட்ட தன்மையினையும் அடிப்படையினையும் கொண்டு விலாசக் கூத்தானது மறைவிடத்திலிருந்து பாடிக்கொண்டு வரும் மரபு காணப்பட்டதெனவும் இதன் பக்கவாத்தியமாக ஆர்மோனியமும் தோல்வாத்தியமும் பயன்படுத்தப்பட்டுள்ளது மேலே கூறிய கருத்துக்கள் விலாசக்கூத்தை ஆடிவந்த முன்னோரின் வழித்தோன்றலான 87 வயதுடைய தற்போது நம்மத்தியில் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்தகலைஞர் வைத்திய கலாநிதி முருகேசபிள்ளையாவார் .

விலாசக் கூத்துக்களானது முதலில் ஆட்டமுறைகளைக் கொண்டிருந்தும் பின்பு ஆட்ட முறைகளற்றதாகவும் காணப்பட்டது வடமோடிக் கூத்தினைப் போலல்லாது சில இடங்களில் வசனங்கள் நீண்டதாக இருக்கும். சிந்துபுரப் பொதுச்சந்தையடியில் ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு செளித்துயர்ந்த புளியமரம் இருந்ததாகவும் அதிலே மூன்று வடங்களை தொங்கவிட்டு நான்கு பேர் இருக்க ஒரு முனையில் ஒருவரும் (ஊஞ்சலுக்கு) மறுமுனையில் மற்றைய நபரும் உதைந்து விளையாடுவதாகவும் ஊஞ்சலாட்டம் இருக்கும். அதில் இருப்பவர்களை நோக்கி உதைபவர்களைப் பாடல்களை பாடுமாறு வேண்டுகோள் விடுப்பதாகவும் கூறுவார்கள். அதற்கேற்ப அவர்கள் கூறுவதற்கு ஏற்றபடி பாடுவார்கள்.இக் கலையும் கூத்துக் கலையில் இருந்து பிறந்த கிளைக் கலைவடிவமாகும்.

விலாசத்தினைப் படச்சட்ட முறையில் மேடை நாடகம் ஆக்கிய பெருமை சர்வகாளி மாருதிதாசன் அவர்களையே சாரும் மார்க்கண்டேயர் நாடகமானது விலாசமாக செகிட்டண்ணாவியாரின் நெறியாள்கையிலே கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் உற்சவத்திலே மேடையேற்றினார். கரம்பன் ஊர்காவற்துறை போன்ற பகுதிகளில் விலாசக்கூத்தானது ஆடப்பட்டது ஸ்ரீவள்ளி நாடகம் வட்டக் கொட்டகையிலேயே ஆடப்பட்டதாக அடியவர்கள் குறிப்பிடுகிறார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வள்ளிக்கு முறிவு நெறிவு விசகடி வைத்தியம் ஆயுள்வேத்தியரும் மூத்த கலைஞருமான முருகேசபிள்ளை அவர்களும் முன்வள்ளியாக மருதப்பு நட்சத்திரமும், முருகனாக குருசாமியும் நடித்தனர்

வள்ளி நாடகமானது வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக மேடையேற்றப்பட்டது. சித்தாந்தசாகரம், மூதறிஞர், முத்தமிழ் ஆசான் கி. துரைசுவாமி அதிபர் அவர்கள் இந்நாடகத்தினை முன்னின்று நடத்திய பெருமைக்குரியவர் என ஆயுள்வேத வைத்தியர் திரு முருகேசபிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள். கி.து அவர்களின் முயற்சியே பாடசாலையானது வளர்ச்சியுறக்காரணமாகும். காரைதீவு பெட்டி வேலுப்பிள்ளை அவர்களே இதனை நெறியாள்கை செய்து மேடையேற்றியவராவர் அதியரசன் நாடகத்தினை வேலுப்பிள்ளை ஆறுமுகம் (கரம்பன்) சிவசம்பு ஆகியோர் ஆடிவந்தனர் எனவும் அறியமுடிகின்றது.

அல்லி அர்ச்சனாவிலே அல்லியாக மருதப்பு வேலாயுதமும் அர்ச்சுனனாக முருகர் பண்டாரப்பிள்ளையும் ஆடினர் எனவும் வித்தியாசம்பந்தன் நாடகத்திலே வித்தியாசம்பந்தனாக மாணிக்கையா அவர்களும் ஆடினர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அண்ணாவி முருகர் வடிவேலர் கருவேற்பிள்ளை ஆகியேர் விலாசக் கூத்தின் முன்னோடிகளாவர் இவ்விலாசக் கூத்திலே ஒரு பாத்திரமானது வாயில் மண்ணெண்ணை வைத்தும் நெருப்புச்சுடரினை கையில் ஏந்தியும் வாயிலிருந்த மண்ணெண்ணையை நெருப்புச்சுடரினை நோக்கி கொப்பழித்து தீப்பிழம்பினை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டினைக் கொண்டதாக அமைகிறது.

இதனை அடியொற்றி இன்றைய நவீன நாடகங்களில் நுணுக்கமாகவும் செய்து காட்டுகின்றனர்.முன்னைய விலாசக் கூத்திலே சுற்றிவர வாழைக்குற்றிகள் பாச்சிமரம் குத்துக்கால் எனபன நாட்டப்பட்டு ஆடப்பட்டதாகச் சான்றோர்கள் சான்று பகர்கின்றனர் செகிட்டண்ணாவியாரின் சிஷ்யர்களாக கீசகன் கந்தையா அண்ணாவியார் முருகர் ஆகியோர் இருந்து விலாசக்கூத்திற்கு உதவியவர்கள். ஸ்ரீ வள்ளி நாடகத்திலே இன்றைய இசைநாடகத்தினைப்போன்று தினைப்புனம் காத்து நிற்கின்ற தன்மையுள்ளது மைனாக்கள் கிளிகள் என்பவற்றை நிஜமாகவே மேடையில் கொணர்வித்தும் இருக்கின்றார்கள் எனபதையும் இவர்கள் குறிப்பிடத்தவறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆலோலம் ஆலோலமே
அண்டைக்குருவிகளே அண்டாதே
கண்டிக் கவண் எடுத்து கல்லெறிவேனே
பட்டப்பகலில் பார்த்திருக்கக் கவர்ந்திடுவீரே"

நான் இங்கு காவல் இருக்கிறேனே கவண் வீசி கல்லெறிவேனே என்ற பாடல் பார்ப்பதற்கு ஓர்கலைச்சுவையை உண்டு பண்ணும். மார்க்கண்டேயர் நாடகத்தில் திரு காசிப்பிள்ளை வாத்தியார் சிவபெருமான் பாத்திரத்திலும் சர்வகாளி மாருதிதாசன் யமன் பாத்திரத்திலும் தம்பிராசா ஆசிரியர் சிவன் பாத்திரத்திலும் நடித்தனர். வட்டுக்கோட்டை மரபினில் விலாசக்கூத்தில் மட்டுமே ஒரு பாத்திரத்திற்காக இருவர் வேடம் ஏற்கும் மரபானது காணப்பட்டது இதனையே ஸ்ரீவள்ளி நாடகத்தில் முன்வள்ளி பின்வள்ளி என்ற பாத்திரத்தில் ஆடியதை சான்றாதாரமாகக் கொள்ளலாம்.

கூத்துக்கள் ஆடிவருகின்ற போது குழு ஒற்றுமை பேணப்படும் தன்மை உள்ளது என கூத்துக்கள் ஆடியோரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது இதன் அடிப்படையில் நட்பு முறைமை பேணப்பட்டது இங்கு காட்சியமைப்பினை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொணர வட்டக்கொட்டகையே களமாக அமைகிறது காட்சியமைப்பின் மூலம் ஆற்றுகை செய்வோருக்கான ஒரு சூழலைப் படைக்கவும் கூத்துத்தொனி மோடி என்பவற்றைப் பகுக்கவும் காட்சியை நகர்த்தலுக்கான உத்தியாகச் சபை விருத்தம் அமைந்திருக்கும்

கொச்சகத்தரு எனப்படும் தருமூலம் முன்பு நடந்த செய்திகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் சொல்லுவதாக அமைந்துள்ளது. வட்டுக்கோட்டை மோடியில் கட்டியக்காரன் அரச வருகையைச் சொல்வதாக அமையும். தருமபுத்திர நாடகத்தில் இது மனுராசன் எனவும் நகுலன் சகாதேவன் தருமன் வீமன் அருச்சுனன் எனவும் விராட நாடகத்தில் விராட மகராசன் எனவும் உரைக்கப்படுகிறது கூத்தினைத் தொடக்கிவைப்பது பிள்ளையார் காப்பு எனினும் இக் கூத்தானது அரங்கம் காணும் போது கட்டியக்காரனே பிள்ளையார் சுழி போடுபவராகின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தில் பங்குகொண்ட வீரம் பொருந்திய கலைஞர்களை சில பெண்கள் மணம் முடிக்க ஆசைப்பட்டதாகவும் ஒரு செய்தி உண்டு

எமது நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக பாரம்பரியமாக – வம்சாவளியாக குறித்த பாத்திரங்களை ஏற்று வந்த கலைஞர்கள் இடம் பெயர்ந்து சென்றமையால் புதிய இளைய தலைமுறையினர் தமது கிராமத்தின் பாரம்பரியக் கலை வடிவத்தைக் காக்கவேண்டுமெனப் பேரவாக் கொண்டனர். அக் குறித்த காலத்தில் எமது சிந்துபுரக் கூத்தின் தன்னிகரில்லாத்தன்மையையும் அது தற்போது தாழ்வடைந்து செல்லும் போக்கையும் எண்ணி வெளியூர் அறிஞர்கள் வேதனை கொண்டு தமது அந்த வேதனையை சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் க. மணிமார்பன் ஆசிரியர் அவர்களிடம் வெளியிட்டனர். ஏற்கனவே எமது கூத்தின்மீது கொண்ட பற்றுதல் காரணமாகவும் அதன் தாழ்மைப் போக்கையும் உணர்ந்த ஆசிரியர் அவர்கள் அந்தப் பாரம்பரியக் கலைவடிவத்தை அழிய விடாது பேணவேண்டும் என்ற ஆர்வம் கொண்டு அமரர் கலாபூசணம் முருகவேள் ஆசிரியரிடம் சென்று இளைய தலைமுறையினருக்குக் கூத்தினைப்பழக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இவரின் இவ் வேண்டுகோளினைச் செவிசாய்த்து மத்தள பூபதி செ. நடராசா அவர்களும், கலைஞர் நா. புவனசுந்தரம் அவர்களும் வே. தவநிருபசிங்கம் அவர்களும் உறுதுணையாக நின்று இதனை முன்னெடுத்தனர்.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியியலாளர்களும் கூத்தின் அனைத்துப் பாத்திரங்களையும் பழைய மரபின் நின்றும் விலகி அதாவது பரம்பரை ரீதியான பாத்திர ஏற்பினின்றும் விலகிப் பாத்திரங்களை ஏற்றனர் இதனால் கூத்தில் ஓர் மறுமலர்ச்சியும் புத்தூக்கமும் ஏற்படலாயிற்று, இதன் காரணமாக பொ. ரவிச்சந்திரன் (வட்டு. இந்துக்கல்லூரி. ஆசிரியர் ) அவர்களும் அன்றைய பல்கலைக்கழக மாணவர்களான திரு தி. குகவண்ணன், திரு பா. பத்மசரன், திரு சி. திருவழகன், திரு பா. நடனசரன் ஆகியோரும் அன்றைய உயர்தர மாணவர்களான திரு தி. சிவவண்ணன், திரு சு. ஜெயதரன் ஆகியோரையும் இணைத்து திரு க. மணிமார்பன் (சங்கானை . சிவப்பிரகாச மகாவித்தியாலயம் ஆசிரியர் ) அவர்கள் தானும் இணைந்து கூத்தினை முறையே பழகி அமரர் அண்ணாவியார் கலாபூசணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.முருகவேள் அவர்களின் வழிகாட்டலில் பிற்பாட்டுக்காரர்களாக திரு வே. தவநிருபசிங்கம் அவர்களும் திரு .தி. குகவண்ணன் ஆகியோரும் பங்கேற்க ஆட்டப் பயிற்சியினை கலைஞர் நா.புவனசுந்தரம் அவர்கள் நெறியாள்கை செய்ய மத்தளத்தினை கலாபூசணம் மத்தளபூபதி செ..நடராசா அவர்கள் வாசிக்க சிந்துபுர நாட்டுக்கூத்து புதியதோர் எழுச்சியான அரங்கைப் படைத்தது.

கூத்துடன் மட்டும் நில்லாது தாளப் புரவி நடனத்தையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக செ. நடராசா முருகம்மை நாட்டுக்கூத்தினை எழுதிய கலைஞர் நா.புவனசுந்தரம், திரு வே. தவநிருபசிங்கம் ஆகியோரின் வழிகாட்டல் உந்து சக்தியாக அமைய பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் ஆசிரியர் அவர்கள் பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய தாளப் புரவிநடனப் போட்டியில் பங்கேற்று முதற் பரிசு பெற்றதும் குறிப்பிடத்தக்கது

இவ்வாறு அரங்கம் பல கண்ட சிந்துபுர நாட்டுக்கூத்து குறிப்பாக 1998ம் ஆண்டு பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய இசைநாடக நாட்டுக்கூத்துப்போட்டியில் அருச்சுனன் பாசுபதம் பெறல் வீமன் பூப்பறித்தல் ஆகிய காட்சிகளை ஒருங்கிணைத்து ஆரணியத்தில் அடல்செறி வீமனும் விஜயனும் எனப் பெயர் கொண்டு மேடையேறி முதற் பரிசைப்பெற்றுக்கொண்டதுடன் மூத்தகலைஞர்கள் பலரின் பாராட்டுதலையும் பெற்றமை நாடறிந்த செய்தியாகும்.

1999ல் அதே கழகத்தினர் நடத்திய போட்டியில் சடாசுரன் வதைக் காட்சியை மெருகூட்டி காட்டகத்தே காமுகனும் கதைவிடா வீமனும் எனப் பெயர் சூட்டிப் போட்டியில் பங்கேற்று மீண்டும் முதற் பரிசைப் பெற்றனர். இவ்வேளையிலே மு.விக்கினேஸ்வரநாதன், அ.அருளாளன், அ.ஜெயசுதன், சி. அருணன் ஆகியோர் முறையே மத்தளம் பாத்திரம் பிற்பாட்டு என்கின்ற வரிசையில் இணைந்து கொண்டனர். இன்னொருபுறம் பாடசாலைகளுக்கு இடையேயான நாட்டுக்கூத்துப்போட்டியில் அண்ணாவியார் செல்லப்பா நடராசா நெறியாள்கையில் ந. சுரேஸ்குமார் கீசகனாகவும் அ.அநபாயன் வீமனாகவும் செல்வன் ச. சுஜீவ் சுபக்கணையாகவும் செல்வன் ப.தபன் திரௌபதியாகவும் பாத்திரமேற்க தி.சிவவண்ணன் ச. கோகுலராம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.தனேந்திரன் ஆகியோர் பாட்டிசைக்க கீசகன் வதை என்னும் நாமம் கொண்டு போட்டியில் பங்கேற்று வடக்கு கிழக்கு மாகாணப்பேட்டிவரை சென்றது. இதேவேளையில் செல்லப்பா நடராசா அவர்களின் புதல்வியான நளினி மத்தளம் வாசிப்பவராகத் தொழிற்கட நாட்டுக்கூத்துப் பெண்கள் அணி கூத்தினைப்பழகி அரங்கேறும் நிலையை எய்தினர். பெண்கள் அரங்கத்தில் ஆடுவதா எனச் சிலரது கருத்து முரண்பாடுகளால் அவ் அரங்கேற்றம் தடைப்பட்டதும் துரதிஷ்டவசமானது இதேநேரத்தில் மட்டக்களப்பில் எமது நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழுவினர் சார்பாக, உலகசமுதாய நாடக அரங்க மாகாநாட்டிற்காக அ.அருளாளன் க. மணிமார்பன் திரு பொ. ரவிச்சந்திரன் பா. நடனசரன் தி. சிவவண்ணன் த.தனேந்திரன் ப.தபன் ம. சசிதரன் சி.அருணன் இ.சதீஸ்வரன் சு .ஜெயதரன் ஆகியோர் கலந்தபோது, அந்நிகழ்வில் ஒன்றாக சீலாமுனை என்ற இடத்தில் சிம்மாசனயுத்தம் என்ற 6 மணித்தியாலம் கொண்ட கூத்திலே கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களும், சீலாமுனையில் பாரம்பரியமாகக் கூத்தினை ஆடிவரும் கலைஞர்களும் பங்கேற்றனர். அக் கூத்துக் கலைஞர்களுள் பெண்களும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இதுபோல எம்மூர்ப் பெண்களும் முன்வரவேண்டும் சாதாரணமாகப் பெண்கள் டென்னிஸ் ஆட்டம் வலைப்பந்தாட்டம் கரபந்தாட்டம் போன்ற பல ஆட்டங்களில் கலந்துகொள்வது வழக்கம் அவ்வாறிருக்க எம்மூர்ப் பெண்கள் கூத்தில் இணைந்து கொள்ளாது இருப்பது வேதனைக்குரியது. எதிர்காலத்தில் பெண்களும் பங்கெடுப்பது விரும்பத்தக்கது.

மீண்டும் 2001ல் நடைபெற்ற பாடசாலை மட்ட நாட்டுக்கூத்துப போட்டியில் கலாபூசணம் அ. முருகவேள் தலைமையில் திரு பொ.ரவிச்சந்திரன் சு.ஜெயதரன் வை. கேத்திரபாலன் யாதவன் சுதன் சி.விஜித் ஆகியோர் பங்கு கொண்டனர்

இவ்வாறான வளர்ச்சியினைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைச் சிந்துபுர நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழு ஈழத்தின் பல பாகங்களிலும் இவ் நாட்டுக்கூத்துக்களை அரங்கமேற்றியது அதில் ப.தபன் ம.சசிதரன் தி. திருமால் அ. நகுலதாஸ் ச. ஹரிச்சந்திரன் சி. குருதேவன் ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையினரும் இணைந்து கொண்டனர். இவர்களுக்கான ஆட்டப்பயிற்சியை கலாபூசணம் க. நாகப்பு அவர்கள் வழங்கினார்.

சிந்துபுரக்கூத்து வளர்ச்சியிலே நாட்டுக்கூத்தும் அதனோடிணைந்த விலாசக்கூத்தும் சிறப்பிடம் பெற்றதாயினும் விலாசக்கூத்தானது இன்று இசைநாடகத்தின் தோற்றத்தின் காரணமாக மருவிச் செல்கின்ற நிலமையையும் விலாசமரபு தற்போது முற்றாக கைவிடப்பட்ட தன்மையினையையும் குறிப்பிடலாம் .இடப் பெயர்வுக்குப்பின் மிகக்குறுகிய காலத்தினுள் சிந்துபுரச்சிறப்புமிகு கலையான இவ் நாட்டுக்கூத்து வடிவத்தினை ஈழதேசம் எங்கும் பரப்பிய பெருமை இன்றைய தலைமுறையினருக்கு உரித்தானது. யாழ்நகரின் பல மேடைகள் குறிப்பாக யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் மூன்று தடவைகளும், யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இரண்டு தடவைகளும், யாழ் சுண்டுக்குழி மகளீர் கல்லூரியிலும், யாழ் இந்துமகளீர் கல்லூரியிலும், யாழ் திருமறைக் கலாமன்ற (திறந்தவெளி) அரங்கிலும், இன்னும் சிறப்புமிகு கலையரங்குள் பலதிலும், மட்டக்களப்பின் உலக நாடக அரங்க வேளையிலும்( மட்டக்களப்பு பல்கலைக்கழகம்) , கொழும்பு மாநகரில் கொள்ளுப்பிட்டி பிஷப்ஸ் உள்ளக அரங்கிலும் அரங்கமேற்றி இலங்கை வாழ் அனைத்து சமூகக் கலைஞர்களினதும் பாராட்டுதலினைப் பெற்றதோடு கிந்துபுரத்தின் தனிப்பெரும் கலைவடிவத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த பெருமை இக்கால இளைஞர்களையே சார்ந்தது. இதன்போது ஒப்பனையை மேற்கொண்ட வ. மங்களேஸ்வரன், பொ.ஜெயரத்தினம், அ.சர்வேஸ்வரன், க.பிரதீபன் சி.ஸ்ரீதரன் வி.சங்கரசிவம் மா.ஞானேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். குறைந்த வளங்கள் இருந்த வேளைகளில் தமது திறமைகள் மூலம் பலர் பாராட்டும் வகையில் பாத்திரங்களிற்கு ஏற்ப ஒப்பனையை இவர்கள் மேற்கொண்டமை காலத்தால் மறக்க முடியாது. இந்தவகையில் தான் இக்காலப்பகுதியினை சிந்துபுரம் நாட்டுக்கூத்தில் மறுமலர்ச்சிக்காலம் எனக் கருதப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் எமது முன்னோர் இலங்கை ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்விலும் எமது கூத்துக்கலை நிகழ்ச்சி இடம் பெற்றது இதற்கு முன்னரும்கூட இலங்கைப் பிரதமர் யாழ் வருமையின்போது (கொத்தலாவை பிரதமராக இருந்த காலத்தில் ) காலவோட்டத்தில் அதன் சிறப்புக்குறையலாயிற்று ஆனால் இடம்பெயர்வின் பின்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இக்கலைவடிவத்தைத் தாங்கி நின்ற இக்கலை இளைஞர்கள் மீண்டும் அதன் தன்னிகரில்லாத்தனிப்பெருமை இக்கால வடிவத்தினை இன்று ஈழமெங்கும் பறைசாற்றி நிற்கின்றார்கள் இதேநேரத்தில் எமது கலைஞர்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் எம் கலைஞர்கள் உலகமெங்கும் பறைசாற்றி நிற்கின்றனர் இதனாலேயே பல்துறைநாடக ஆய்வாளர்கள் பலர் பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்கள் நாடகத்துறைக்கு புத்தூக்கம் வழங்கும் அமைப்புக்கள் என பலர் இன்று நம்மூரைத்தேடி வந்து நிற்கின்றனர். இத்தகைய சிறப்புமிகு கலையை பேணிக்காத்து அடுத்த தலைமுறையினருக்கு நம்மவர்கள் கையளிப்பார்களா ? அதற்கு கலைஞர்கள் உறுதுணைபுரிவார்களா?.

– நாட்டுக்கூத்துக் கலைஞர் திரு தி.சிவவண்ணன் –
( பிறைசூடன் கல்வி நிறுவன இயக்குநர் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வினாத் தொகுதி -1


**மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்**




கீழே தரப்பட்டுள்ள உருக்கள் ஒவ்வொன்றிலும் மேலே தரப்பட்டுள்ள உரு ( A அல்லது B அல்லது C அல்லது D அல்லது E ) ஒன்று மறைந்துள்ளது அதனைக் கண்டுபிடியுங்கள் )













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விடைகள் – மறைந்திருக்கும் உருக்களை இனங்காணுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** A | **8.** B | **15.** D | **21.** A | **27.** B |
| **2.** C | **9.** B | **16.** C | **22.** C | **28.** E |
| **3.** B | **10.** D | **17.** D | **23.** D | **29.** B |
| **4.** D | **11.** A | **18.** B | **24.** B | **30.** D |
| **5.** C | **12.** C | **19.** C | **25.** D | **31.** C |
| **6.** A | **13.** B | **20.** A | **26.** E | **32.** A |
| **7.** D | **14.** E | | | |

## விளக்கங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9


10


11


12


13


14


15


16


17


18


19


20


21


22


23


24


25


26


27


28





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வினாத் தொகுதி -2**

**பகுதிகளினால் ஆக்கப்படும் உருவத்தைத் தெரிவுசெய்யுங்கள்**











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விடைகள் –

பகுதிகளால் ஆக்கப்படும் உருவத்தைத் தெரிவு செய்யுங்கள்

1. C　　3. A　　5. C

2. B　　4. A


**விளக்கங்கள்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**வினாத்தொகுதி-3**

**சுழற்றும் போது தோன்றும் உருவை தெரிவு செய்யுங்கள்**


(1)



(2)




(3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4





5





6




7






8







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9



10




11



12






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13




(A) (B) (C) (D)

14




(A) (B) (C) (D)

15



(A) (B) (C) (D)

16




(A) (B) (C) (D)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17




(A) (B) (C) (D)

18




(A) (B) (C) (D)

19



(A) (B) (C) (D)

20




(A) (B) (C) (D)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(21)



(A) (B) (C) (D)

(22)



(A) (B) (C) (D)

விடைகள் –

சுழலும் போது தோன்றும் உருவைத் தெரிவு செய்யுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. D | 6. C | 11. B | 15. A | 19. C |
| 2. B | 7. C | 12. D | 16. A | 20. A |
| 3. D | 8. C | 13. D | 17. C | 21. C |
| 4. B | 9. B | 14. C | 18. B | 22. B |
| 5. A | 10. D | | | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தொகுதி -4


சதுரமுகிகளைத் திருப்பும் போது உண்டாகும் சதுரமுகியைக் கண்டுபிடியுங்கள்

1)




(A) (B) (C) (D)

2)




(A) (B) (C) (D)

3)



(A) (B) (C) (D)

4)




(A) (B) (C) (D)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


5)





6)





7)




8)





9)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10)




(A) (B) (C) (D)

(11)



(A) (B) (C) (D)

(12)



(A) (B) (C) (D)

விடைகள் –

சுழலும் போது தோன்றும் உருவைத் தெரிவு செய்யுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. B | 05. C | 09. A | 12. B, C |
| 02. B | 06. B | 10. D | 13. C |
| 03. A, C | 07. D | 11. B, C | 14. A |
| 04. A, D | 08. A | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகர் வரலாறு

திராவிடர் பண்டுதொட்டுச் சீர்திருத்தமுற்ற மக்களாகத் திகழ்ந்தனரென்பது சரித்திரவுண்மையாகும். சீர்திருத்தமற்ற புயவலிமிக்க ஆரியர் இவர்களை ஆட்கொண்டனர். திராவிடர் தமக்கெனவுரிய தனிநாகரீகத்தை உடையராயிருந்தனரெனினும்., ஆரியர் விதித்த நாற்குலத்தினை ஒப்புக்கொள்ள வேண்டியவராயினர் பிரபல எழுத்தாளர் ஒருவர் தற்போது பரதகண்டத்தில் முப்பது இலட்சம் பார்ப்பனர் தொடக்கம் அறுநூற்றெழுபது இலட்சம் தீண்டாதார் வரையும் முன்நூற்றுக்கு மேற்பட்ட சாதி வகுப்புக்கள் உண்டெனக் கூறியுள்ளார்.

இலங்கைத் தீவில் போர்த்துக்கேயர் தமதாட்சி நிலவிய காலத்தில் அம்மன் கோவில்களை மாதாவின் கோவில்களாக்கினர். அவர்களின் ஆட்சி தொலைந்த பின்னர் மாதாவின் கோவில்கள் அம்மன் கோவில்களாயின. ஆனால் ஆரியர் ஆதிக்கம் ஒழிந்த பின்னும் அவர் விதித்த சாதிக்கோட்பாடுகள் நின்று நிலவுகின்றன.

குலம் நான்கும் எவை என்பதற்கும் இக்குலமுறை ஆரியர் வந்த பின் பண்டுதொட்டுத் தமிழ் உலகிற் கையாளப்பட்டு வந்தனவென்பதற்கும் இலக்கியச் சான்றுகளுள.

"பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியுஞ் சதுக்கமும் ஆவண வீதியும்"

எனுஞ் சிலப்பதிகார அடிகளுக்கு "குலம் நான்காகப் பகுத்த வகையால் தெரிந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும் முற்சந்தியும் நாற்சந்தியும் கோயிலங்காடியும் என அடியார்க்கு நல்லார் உரை தந்தனர்.

மறையோம்புதற்கும், அரசர் முதலியோர்க்கு ஆலோசனை கூறுவதற்கும், ஏற்ற ஒழுக்கமும் அறிவும் படைத்தோர் அந்தணர் என்னும் வகுப்பினராகவும், புயவலியும் துணிபும் ஆற்றலும் படைத்தோர் அரசராகவும், திரைகடலோடித் தேசங்கள் தோறுஞ் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமாற்றுச்செய்யுந் திறனுடையோர் வணிகராகவும் , உழுதூண் பெருக்க வல்லோர் வேளாளரெனவும் வகுக்கப்பட்டனர். இவ்வகுப்புகளை முறையே கல்வி கலாசாரத் திணைக்களமெனவும் , தேசப்பாதுகாப்புத் திணைக்களமெனவும், வர்த்தகத் திணைக்களமெனவும், உணவுவிருத்தித் திணைக்களமெனவும் கூறலாம். பேரறிஞர்களும் இவ்வகுப்புக்கள் முதற்தோன்றிய போது மக்கள் யாவரும் ஒரேவகுப்பினராக இருந்தனரென்றும் கல்வி, ஒழுக்கம் , துணிபு , உடல்வலி முதலிய தகுதிகளுக்கேற்ப நான்கு திணைக்களங்களாக வகுக்கப்பட்டனரென்றும் கூறிச்சென்றனர் .

ஒரே தரத்தினராகிய மக்கள் இவ்விதம் நாற்குலத்தினராக – நான்கு திணைக்களங்களுட் சேர்ந்தோராக – வகுக்கப்பட்டமை தேசநலன் கருதியும் மக்கள் முட்டின்றி வாழ்வது கருதியுமன்றி உயர்வு தாழ்வு நோக்கியல்லவெனத் துணிந்து கூறலாம் . தொழில் காரணமாகத் தோன்றிய குலங்கள் பிறப்புரிமையைக் காரணமாகக் கொண்டமை கவலத்தக்கது. நாளடைவில் உயர்வு தாழ்வு உணர்ச்சிகள் தோன்றி வளர்ச்சி அடைந்தன . அந்தணரிற் பலர் தங்குல ஒழுக்கம் குன்றிய பின்னரும் அந்தணராம் பதவியில் நின்றும் இறங்காது பிறப்புரிமைக்கே முதன்மை அளித்தனர் . ஏனைய குலத்தினர் கல்வி, கேள்வி ஒழுக்கங்களில் அந்தணர் பலரினும் மேம்பாடு எய்தியும் முதன்முதல் ஆரியரால் அமைக்கப்பட்ட வகுப்பில் நின்றும் ஏற்றம்பெற முடியாராறினர். அந்தணர்க்கு உரிய செந்தண்மை பூண்டொழுகல் என்னும் இலக்கணம் எஞ்ஞான்றும் பிறப்பினால் அமையாதென்க. வெட்டைநோய் உடையார்க்கு வெட்டைநோய்ப் புதல்வர் நிச்சயமாக பிறத்தல் போன்று கல்வியும் ஒழுக்கமும் உடையார்க்குக் கல்வியும் ஒழுக்கமும் உடைய புதல்வர் பிறக்கின்றிலர். மக்களுட் சிலர் பிறப்புரிமை இன்றிச் சால்பு காரணமாக உயர்ந்தோர் ஆயினமைக்குச் சான்றுகள் உளவெனினும் அவை மிகமிகச் சிலவே. சாதிப்பாகுபாடு பரதகண்டமெங்கணும் விசேடமாகத் தமிழுலகெங்கணும் பூதவுருவெடுத்தது . இதன் கொடுமையை அறிஞர் பொருமக்கள் பலர் அவ்வப்போது மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

தமிழர் நாகரிகம் மிக மிகத் தொன்மை வாய்ந்தது . உலக சரித்திரத்திலே தமிழரே முதன்முதல் நாகரிக வாழ்க்கை எய்திய சாதியினராவர். இவர்கள் கடல்மேல் சென்று பலப்பல நாடுகளிலுந் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகத்தைப் பரப்பினர். இதனைச் சரித்திர வரலாறு அன்றித் தொல்பொருளாராய்ச்சிச் சான்றுகளும் வலியுறுத்தும். தமிழர் ஆதியில் நெய்தனிலப் பெருமக்களே.

NkY k;t fyhee; mbfs;"ஹிறாஸ் சுவாமியார்" கண்டறிந்து வெளியிட்ட கருத்துக்களை ஒரு கட்டுரை மூலமாக வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் சில பின்வருமாறு...

"மொஹெஞ்சதாரோ" விளக்கமுற்றிருந்த காலத்தில் சிந்துநாடு (இந்தியா) ஆனது. மீனாடு, பறவைநாடு, மரங்கொத்தி நாடு, ஏழ்நாடு என்னும் நாற்பெரும் பிரிவினதாக இருந்தது. சிந்துநதியின் வலப்புறத்தில் இருந்த மீனாட்டிலே வாழ்ந்தோரது கொடியிலே இணைமீன்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்நாட்டுத் தலைநகராகிய நண்டூர் என்பதே இப்பொழுது நிலத்தை அகழ்ந்து காணப்பட்ட "மொஹெஞ்சதாரே" (இறந்தோர் தரை) என்னும் இடமாகும். உடையூர், ஊரிலூர், எய்கையூர், மூனூர் (வடமொழியாளர் கூறும் திரிபுரம்) என்னும் நகர்களும் மீனாட்டில் இருந்தன. மரங்கொத்தி நாடு பனிபடர்ந்த மலைநாட்டில் இருந்தது. இங்கு வாழ்ந்தோர் சிவலிங்கத்தையும் மூவிலை வேலையும் வழிபட்ட வேலாளீர் ஆவர். (பிற்காலத்திலே வேளிர் எனவும், வேளாளர் எனவும் வழங்கப்பட்டோர் இவர் என எண்ண இடமுண்டு).

பழைய சுமேரியர் திராவிட குலத்தார் என்பது சுமேரிய உருவங்களைக் கூர்ந்து நோக்குவாருக்கு இனிது புலப்படும். திராவிட மொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியரின் உருவத் தோற்றமே பழைய சுமேரியரின் உருவத் தோற்றம். பழைய சுமேரியர் இந்தியாவில் இருந்து கரை வழியாகவும் பாரசிகக் கடல் வழியாகவும் சுமேரு நாட்டிற் குடியேறினார்கள் என்று எண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புதிய நாட்டிற்குக் கொண்டு வந்த நாகரிகம் சிந்து நதிக் கரையிலே வளர்ச்சி எய்தி இருக்கலாம். சித்திரங்களை எழுத்தாக வழங்கிய முறையினின்று செப்பமெய்திய இவர்களது எழுத்து முறை பின்னாளிலே பபிலோனியத்திலே சதுரமுனை எழுத்தாணிகளாலே பசு மண்வட்டிகைகளிலே எழுதப்பட்டுக் "கியூனிபோம்" என்னும் ஆப்பு வடிவ எழுத்துக்களாக உருத்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் சிந்துநதிக் கரையில் இருந்து சுமேரு நாட்டிற்கு வரும் வழியிலே ஏலம் என்னும் நாட்டிலே தமது நாகரிகத்தைப் பரப்பினார்கள். சிந்து நதிக்கரையில் இருந்து மீனாட்டு நண்டூராகிய "மொஹெஞ்சதாரோவின்" வரலாற்றையும் பழைய சுமேரிய வரலாற்றையும், "குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி" என்னும் சிலப்பதிகாரக் கூற்றையும் நாம் படிக்கும் போது தலைச் சங்கத்தினிறுதிக் கடற்கோளின் பின் பாண்டியனது ஆட்சியிலிருந்த தமிழ் மக்களுள் ஒரு பகுதியார் கடல் கடந்து பாரசிகக் கடல் வழியாகச் சென்று, "யுபிறாற்றஸ் – தைக்கிறிஸ்" நதிக்கரையிலிருந்த நாட்டிற் குடியேறி அதற்குச் சுமேரியா என்னும் பெயரிட்டு வழங்கினார்கள் என்பதும், மற்றொரு பகுதியார் "வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு சிந்துநதிக் கரையிலே" தாங் குடியேறிய நாட்டிற்கு மீனாடு எனப் பெயரிட்டு இணைக்கயல் பொறித்த கொடியை உடையராய் வாழ்ந்தாரென்பதும் புலனாகின்றன. இங்கு உறைந்து சிலகாலத்தின் பின் கரை வழியாகவும் சுமேரியாவுக்குச் சென்றிருக்கலாம்.

"மொஹெஞ்சதாரோவில்" திரையர் என்னும் ஒரு குலத்தினர் வாழ்ந்தனர். இவர் கீழ்ப்புறமாகச் சீனதேசம் வரையும் சென்றனர். மேற்புறம் சென்று சுமேரியாவை அடைந்தனர். மண்வீடுகளில் வசித்த சுமேரியருக்குச் செங்கற்களால் வீடுகட்டப் பயிற்றினர். "ஹெறோடோற்றஸ்" என்னும் சரித்திர ஆசிரியர் மீனவர் பெருங்கப்பலோட்டிகள் என்கின்றார். இவர்க்கு, "ஹெறோடோற்றஸ்" "தேர்மீலோய்" என உபயோகித்த பதம் திரமிலரைக் குறிக்கின்றது. திரமிலர் என்பது திராவிடரைக் குறிக்கும்.

முன்னர் திமிலரர் "மீலியஸ்" நாட்டற் குடியேறினரென்றும், "மீலியஸ் நாடு" "லீசியா" வாயிற்றென்றும், திரெமிலரே லீசியராயினரென்றும் கூறினோம். இவர்களைப் பற்றி வண.ஞானப்பிரகாச சுவாமிகள் மேலும் பின்வருமாறு கூறுகின்றனர்.

"இவர்களுடைய பழக்கவழக்கங்களுளொன்று, வேறு எந்தச் சாதிகளுள்ளும் காணப்படாதது, அது யாதெனில் இவர்கள் தங்கள் வழிமுறையைத் தந்தையில் நின்றன்று தாயில் நின்று எடுத்துச் சொல்லுகின்றவர்கள். ஒருவனிடம் அவன் குலவழியைக் கேட்பின் அவன் தகப்பனின் வம்சாவளியை அல்ல, தாய் வம்சாவளியையே எடுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவான். ஒரு குலமகள் அடிமை மகனை விவாகஞ் செய்து கொள்ளின் இருவருக்கும் பிறந்த பிள்ளை மேற்குலத்ததாக எண்ணப்படும். அடிமை, குலமகனை மணந்தாலோ சந்ததி அடிமையாக மதிக்கப்படும்."

"எரோடோத்தொஸ்" சொல்லிய குணங்குறிகள் உள்ள அக்காலத்து மக்கள் தமிழரே. இச் சாதியாருள் இன்றைக்கும் பெண் தலையிடம் பெற்றிருந்தலைக் காணலாம் . பிளினி என்னும் உரோம நூலாசிரியர் பாண்டியர்களுள் மட்டும் பெண்கள் அரசாளும் வழக்கம் இருந்ததெனக் கூறியதும் இங்கு நோக்கத்தக்கது. இன்றைக்கும் மலையாளத்தில் பெண்களுக்கே ஆண்களிலும் கூடிய உரிமைகள் உள. அரசனின் உடன்பிறந்தால் அரசி என்னும் பட்டத்திற்கு உரியளாவள். அரசன் மகன் அல்ல, அவள் மகனும் மகளுமே இளைய இராசா, இளைய இராணி என்னும் நாம காரணத்திற்கு இலக்கானவர்கள். அதனொரு பாகத்தில் மாமன் பெயரைத் தந்தை பெயராகக் கொள்ளும் மருமக் கட்டாயம் வழங்கியமையால், அது நாரிசேரம் எனப் பெயரடைந்தமையும் நோக்குக. தாயம் என்ற சொல்லும், தாய் ஆட்சியைக் காட்டுவது போலும் , யாழ்ப்பாணத்தில் முக்காட்பங்கு நிலம் பெண்களுடையது. பெண்ணரசு தமிழகத்தில் விளங்கிய காலங்களும் உள. பெற்றோரைக் குறிக்குமிடத்து தந்தை தாய் என்றன்றித் தாய் தந்தை, அன்னையும் பிதாவும் எனக் கூறும் வழக்கத்தையும் காண்க. கடவுளை ஆதித் தமிழர் பெண் உருவாகச் சொல்லியதும் உண்டு.

ஆகவே, "ஏரோடொத்துஸ்" உடைய திரமிலே பெண்வழியைப் போற்றிய வழக்கம் இக்காலத் தமிழருடையதை ஒத்திருக்கக் காணலாம். கிரேத்தா தீவைத் திரேமிலருடைய வாசற் தானமாகப் பழைய சரித்திர ஆசிரியர்கள் காட்டியதற்கிணங்க , அத்தீவின் பழைய பேரும், தரிமிலி என்றிருந்ததையும், "லீசியர்" தங்கள் பிரேதக்குழிக் கல்வெட்டுக்களில் தங்களுக்குக் "தரமிலே" என்று பெயர் பொறித்து வந்ததையும் நோக்குக. அத்தீவின் பழைய நாகரிகமும், தமிழ் நாகரிகமும் ஒன்று என்பது இற்றைக்கு நன்றாய் நிலைநாட்டப்பட்ட ஒரு உண்மை. அதற்கு இலிங்க ஆராதனம் தாய்த் தெய்வ வழிபாடு, ஏறு தழுவல், பிணங்களைத் தாளியில் இட்டுப் புதைத்தல் ஆகிய பல மறுக்கொணா ஒப்புமைச் சாட்சிகள் உள.

"ஏரொடொத்துஸ்", கண்ட இடங்களில் திரெமிலே ( அல்லது திரமேலிர் ) எனப்பட்ட தமிழர் பரத கண்டத்திலேயும் முற்காலத்தில் திரமிளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைக்கப்பட்டமையை இனி நோக்குவோம். தமிழ் நூலாசிரியர்களுள் முதல்முதல் இதற்குச் சாட்சியானவர் இற்றைக்கு முந்நூறு வருடங்களின் K d >"பிரயோக விவேகம்" என்னும் நூலை இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதராவர். இவர், "த்றமிள" என்னும் வடமொழிப்பெயர் தான் தமிழெனச் சிதைந்து வந்ததெனச் செப்பினர். இப்பெயர் வடமொழி நூல்களுள் திரவிடம், திராவிடம் எனச் சிறிது திரித்து வழங்கப்பட்டதை மனுஸ்மிருதியிலும், பிற்பட்ட வடமொழிப் புராணங்களிலும் காண்கின்றோம். சில இடங்களில் தென்னாட்டார் அனைவரையும் பொதுவாய்க் குறித்த இப்பெயரீடு தமிழருக்கே சிறப்பாய்ப் பொருந்துவது என்றதைக் கி.பி ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குமாரில பட்டர் " ஆந்திரத் ராவிட பாஷா" என்று வகுத்துக் கூறியதனால் விளங்க வைத்தார். ஆந்திரம் என்பது தெலுங்கு. கன்னடத்தை இவர் தெலுங்கோடு சேர்த்தார் போலும். அக் காலம் மலையாளம் தமிழிலிருந்து முற்றாகப் பிரிபடாது நின்றமையால் அது தமிழுள் அடங்கும். உள்ளபடி தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளர் எல்லாம் ஆதித் திரமிளருள் அடங்கியவர்களே.பிற்காலம் மட்டும் தமிழரெனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்னாட்டாருக்குத் " திரமிளர்" என்னும் பெயர் வேறு கூறப்பட்டது. இவர்களுடைய மொழி தான் "திரமிளம்" எனச் சிறப்புப் பெயர் அடைந்தது. தமிழ், வடநாட்டாரால் திராவிடமென வழங்கப்பட்டதற்குக் குமாரில பட்டர் கூற்று ஒரு நற்சான்று.

"திரெமிலே" (திரமேலிர்) என்னும் பெயர் தென்னாட்டில் தமிழரென மருவி வழங்க வடமொழி நாடகங்களிலும், சமணர் நூல்களிலும் அது " தவிட தபிள" என மாறுவதாயிற்று. ஆயினும் கி.பி 6ம் நூற்றாண்டிலே தான் " வராகமிசிரரின்" நூலின் பழங் கையெழுத்துப் பிரதிகளில் "த்திரமிட" என்னும் உருவம் காணப்பட்டது. அந் நூற்றாண்டிலேயே, மங்கலேச அரசன் சாசனங்களில் "திரமில" என வருகின்றது. தென்னியந்தியத் தமிழரை அறிந்த கிரேக்க ஆசிரியர்கள், தங்கள் நூல்களில் தமிழரென்ற பிற்கால உருவத்தைத் தான் "தமேராய்" ஆகிய வெவ்வேறு வகையாய்த் திரித்து எழுதினர்.

இவ்வாறாயின் "தெர்மிலே" அல்லது "திரெமிலே" என்னுஞ் சொல்லின் பொருள் யாது? பழஞ் சொல் ஆராய்ச்சி முடிபுகளின்படி, "தெர்மிலே" என்பது, "திரமிலே" என்னும் உருவத்தின் ஒலிவடிவம். "திரெமிலே" என்பது "திரமேலிர்" என்னும் பழந்தமிழின் கிரேக்க வடிவம். திர என்பது திரை என்னும் சொல்லின் பழைய வடிவம். கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அதன் பொருள். திரை மேலிர் என்பதில் – இர் என்பது வேளிர், மகளிர் என்பவற்றின் போல உயர்திணைப் பன்மையை உணர்த்தும் பழைய கடைநிலை. இர் இன்றைக்குப் பெரும்பாலும் –அர் என நிற்கின்றது. ஆகவே திரைமேலிரை இன்றைய வழக்கின்படி திரைமேலர் என வழங்க வேண்டும். திரைமேலரையே கிரேக்கர் "திரெமிலே" என்றும் "தெர்மிலே" என்றும் திரித்துச் சொல்வோராயினரென்க.

கடல்மேற் செல்வோர் கடலோடு சம்பந்தம் பூண்டோர் என்பது தான் திரைமேலர் என்பதன் கருத்து. பிரயாணம் பயணம் என வந்தது போல, திரமேலர் , தமிலர், தமிழர் என வந்தது. தமிழர் பேசிய மொழி தமிழ் என்றாயிற்று.

மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் தமது கட்டுரையொன்றிற் பின்வருமாறு கூறுகின்றார்.

"திமிலர் எனப்படுந் தமிழ் நிலத்தாரே ஆதியில் கடல் வழியாகப் பிறநாடு சென்று வாணிகஞ் செய்தாரென்று சரித்திர ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றமை நெய்தல் நிலத்து வசிக்கும் திமிலரையே குறிக்குமாதலின் நெய்தல் நிலத்து வாழுந் திமிலர் வாணிப நிமித்தம் தமது மரக்கலங்கள் வழியாகக் கடல்கடந்து பிறநாடு செல்ல அவர் மனைவியர் தனித்திருந்து இரங்கலாயினும், அவ்விரங்கல் நெய்தற்குரித்தாதல் காண்க. தமது மரக்கலங்கள் வாயிலாகக் கடலிற் சென்று பழகிய திமிலர்க்கே முதலிற் கடல் வழியாகப் பிறநாடு சென்று வாணிபஞ் செய்தல் இயலுமென்க."

குறுந்தொகை ஆராய்ச்சியுள், நெய்தற்றிணையை ஆராய்ந்த வித்துவான் இராஜ .சிவ. சாம்பசர்மா அவர்கள், நெய்தல் நிலத்துக் கருப்பொருள்கள் கூறும்வழி, சேர்ப்பன் புலம்பன், பரத்தி, நுழைச்சி, திமிலர் முதலியோரை உயர்ந்தோரெனக் குறிப்பிட்டார். மட்டக்களப்பிலுள்ள புளியந் தீவில், புலியன் என்னுந் திமிலர் குலத்தரசன் அரசாண்டான் என்றும் பின்னாள், புலியன்தீவு என்பது புளியந்தீவு என வந்ததென்றும் சுவாமி விபுலாநந்த அடிகள் ஈழகேசரியில் எழுதினார். பண்டைக்காலத்தே கடல் கடந்து வேற்றிடஞ் சென்று அரசு வீற்றிருந்தமைக்குச் சுலபமாயிருந்தது . அவனும் அவனைச் சார்ந்தோரும் கப்பலோட்டுதலில் வல்லமை பெற்றதினாற் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலைப் பிரிவில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிற் பட்டோலை வாசிக்கப்படும் பொழுது "சிந்துநாட்டார் வருக" என திமிலர் குலத்தவரைக் குறிப்பிடலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆதித் திராவிட மக்கள் இவர்களைக் கண்டபோது "சிந்து நாடு வருக" என இவர்களை முகமன் கூறி உபசரித்தமையும், அராலி வடக்கில் வதியும் இவ் வழியினரின் பழைய ஊஞ்சற் பாட்டில், இவர்கள் தம்மைச் "சிந்துநாட்டாரெனப்" புகழ்ந்து பாடியிருத்தலும் பொருள் பொதிந்த செயல்களாகும். இலக்கியப் பூஞ்சோலை என்னும் சஞ்சிகையில் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை என்பார் திருகோணமலைப் பிரிவிலுள்ள திமிலர் குலத்தினரைச் சிந்து நாட்டாரெனக் குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ஈண்டு சிந்து நாடு என்பது சிந்துநதிப் படுக்கையேயாகும். முன்னரே இந் நூலிற் காட்டியவாறு "வண அன்றூஸ் பாதிரியாரினதும்", "ஓணேசிக் கிறிஸ்ரர்" என்னும் கப்பலோட்டியினதும் கூற்றுக்களை இவ்விடத்தில் ஒப்பு நோக்குக.

இது காறும் கூறியவற்றாற் பேரறிவும், ஆராய்ச்சிப் பேராற்றலும், பகுத்தறிவுமுடையோர் போற்றுதற்குரிய நடுநிலைமையும், உடைய பண்டைய இதிகாச நூலாசிரியரர்களின் கருத்துப்படி, சிந்துநதிப்படுக்கையில் உன்னத நாகரிகமும், உன்னத அந்தஸ்தும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்த திரமிலரின் கலப்பற்ற வம்சாவழியினர் திமிலர் குலத்தினர் என்பது தெளிவுறப் பெற்றாம்.

ஒரு குலத்தினரின் தற்காலப் பொருளாதார நிலையைக் கொண்டு அவர்களிடம் சரித்திர வாயிலாக நிலைநாட்டப்பட்ட பண்டைக்கால நாகரிகத்தை எத்துணைத்தானும் மறுத்தல் இயலாதென்பதை ஈண்டுக் கூறுதல் அவசியமாகின்றது. எடுத்துக்காட்டாக மொஹெஞ்சதாரோ, மெம்பிஸ் ( எகிப்து) முதலிய இடங்களில் நாகரிகம் கி.மு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு வரை விளங்கிற்று. பாபிலோனிய அசீரிய நாகரிகம் கி.மு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. பாரசீக நாகரிகம் கி.மு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. இத்தேயங்கள் நாகரிக நிலையில் மிக முன்னேற்றமடைந்த காலத்தில் தற்போது வியக்கத்தக்க முன்னேற்றமடைந்த தேசத்தினரின் பெயரே உலகில் தெரியப்பட்டிலது இவருடைய தற்போதைய நிலையைக் கொண்டு பண்டு நாகரிகம் அடைந்த மக்களின் பெருமை அளவீடக்கரிதன்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வணிகர் குலத்திமிலரின் இருக்கைகளை நோக்குவோம். இதுவரை கிடைத்த புதைபொருள் ஆராய்ச்சியின்படி இவர்களின் முன்னோர் சிந்துநதிபடுக்கையில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தனர் என்பது வெளிப்படை பெரும்பாணாற்றுப்படையில் உரையாசிரியர் நச்சினாக்கினியர் இது திமிலர் முதலியோர் இருப்புக் கூறியவாறாயிற்று எனக் காட்டும் பகுதிகளை எடுத்துக்கொள்வோம்

"..........................................பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளற் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளி நீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொண்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ் சிறந்தாலும்
பீலி மஞ்சையி னிய லிக்காலத்
தமனியப் பெற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைய
முத்தவார் மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கில்..........."
என்பது அது

இப்பகுதிகளை நோக்குந்தோறும் திமிலர் முதலியோர் வாழ்ந்த இடங்கள் பெரும்பான்மையும் துறைமுகங்களை அடுத்து இருந்தனவென்றும் வியாபாரப் பொருள்கள் வந்து குவிந்தனவென்றும் தெருக்கள் யாண்டும் பண்டசாலைகள் மலிந்து கிடந்தனவென்றும் வீடுகள் யாண்டும் வருவோருக்குக்கொடுப்பதற்குச் சோறு முதலிய உணவுப்பொருள்கள் மல்கியிருந்தனவென்றும் வானளாவிய மாடங்கள் பல இருந்தனவென்றும் கருத்தையும் கண்னையும் ஈர்க்கும் அணிநலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த மகளீர் ஆண்டுவதிந்தனரேன்றும் அறிகின்றோம் இது கொண்டு இவர்களது பண்டைச் செல்வச் செழிப்பு இனிது உணரக் கிடக்கின்றது

வணிகராய திமிலர் தமது சொந்தத்தொழிலாம் வாணிகத்தைச் செய்துகொண்டு தென்னிந்திய நகரங்களில் வாழ்ந்தார் என அறிகின்றோம் இவர்களது வம்சவழியினர் தற்போது தென்னிந்தியாவில் யாண்டு வாழ்கின்றனரோ எனின் அதனை அறிதற்கு நிச்சயமான ஆதாரங்கள் கிடைத்தில எனினும் போத்துக்கீசர் வருவதன் முன்னே திருச்செந்தூரைச் சூழ்ந்த பகுதிகளில் வணிகராய திமிலர் வாழ்ந்தனர் என்றும் திருச்செந்தூர்க் கோயிலும் இவர்களுடையதாய் இருந்தது என்றும் போத்துக்கீசர் இவர்களது மதத்தினை மாற்ற முயன்றபோது இவர்கள் அதனை வெறுத்து பங்களூர், கோயில்பட்டி அம்பாசமுத்திரம் பாபநாசம் முதலிற ஊர்களிற்சென்று குடியேறினர் என்றும் ஒரு நம்பகமான செய்தி கிடைத்திருக்கின்றது .

"திமிலன் அடிமைப்படுவதுமில்லை
திருச்செந்தூர்முடி அசைவதுமில்லை"

என்னும் பண்டைய நாடோடிப்பழமொழியும் ஈண்டு நோக்கத்தக்கது. போர்த்துக்கீசர் தாக்குதலை மீறமுடியாத ஒரு சிலர் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டனர் போலும் ஈழநாட்டில் வணிகராம் திமிலர் பல இடங்களில் வாழ்கின்றனர் யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஊர்காவற்துறை தோப்புக்காடு நாவாய்த்துறை அராலி வட்டுக்கோட்டை கொக்குவில் முதலிய இடங்களிலும் திருகோணமலைப்பிரிவில் மல்லிகைத்தீவு ஈச்சிலம்பற்றை முதலிய இடங்களிலும் மன்னார்ப்பிரிவில் மாதோட்டத்துக்கு அண்மையிலும் சிலாபப்பிரிவில் திமிலை என்னும் இடத்தில் வாழ்கின்றனர.

இவ்விடங்களிலெல்லாம் பண்டைக்காலத்திற் பொயர் பெற்ற துறைமுகங்களாற் அமைந்த பட்டினங்களாற் இருத்தல் நோக்கற்தக்கது ஊர்காவற்றுரை தோப்புக்காடு ஆகிய இரு இடங்களில் பதினெட்டாம் நூற்றாண்டிறிதிவரை வணிகர் குலத்தினர் தமக்குப் பண்டுதொட்டுச் சொந்தமான வாணிகத்தையும் கப்பல் கட்டுவதையும் செய்துவந்தனர் தென்னிந்திய முறைமுகங்களாற தூத்துக்குடி அதிராம்பட்டினம் முதலிய இடங்களுக்குப் பாய்க்கப்பலகளில் சென்று வாணிகம் செய்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைக்கப்பல் புகைவண்டி முதலிய போக்குவரத்துச்சாதனங்கள் ஏற்பட்ட இக்காலத்தில் படகுக்கப்பல் ஆகியவற்றின் உபயோகம் குன்றியபோது இவர் படகுகொண்டு புகைக்கப்பலில் நின்று தரைவரை இறக்குமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஏனைய இடங்களில் வசிக்கும் இவர்களில் பொரும்பான்மையினர் மனிதசமுகத்திற்கு இன்றியமையாத வேளாண்மை மீன்பிடித்தல் ஆகியதொழில்களிலும், பலர் உத்தியோகங்களிலும், சிலர் வீடமைத்தற்றொழில், சுருட்டுத்தொழில் முதலியவற்றிலும் அமர்ந்திருக்கின்றனர். ஒரு சிலர் பெயர்பெற்ற சித்த வைத்தியர்களாகவும், மாந்திரீகர்களாகவும் இருக்கின்றனர்.

கி.பி முதலாம் நூற்றாண்டுக்குரிய பேர்பெற்ற பண்டைக்கிரேக்க நூலாசிரியர் தொலமி தமிழகத்தின் துறைமுகங்களைப் பற்றி விரித்துரைத்திருக்கின்றாரென்றும், குமரி முனையிலிருந்து கீழ்க்கடற்கரைவரையில் கடற்றொழில் வாழ்க்கை நடத்திய பரதவர் என்ற இனத்தவரைக் கரியாய் எனக் கூறிப் போந்தார் என்றும் கரியாய் என்பதன் தமிழ் வடிவம் கரையார் என்றும் ஒரு நம்பகமான வரலாற்றுக் குறிப்பு காணப்படுகின்றது.

வீரத்தமிழ் வாலிபர்களே இன்று உலகஅரங்கில் அமெரிக்கர் ஆள்கின்றனர் சீனர் ஆள்கின்றனர் சிங்களவர் ஆள்கின்றனர் நூற்றுக்கணக்கான சாதியினர் ஆள்கின்றனர்

இப்பாரிய உலகினில் தமிழர் தாழ்ந்தோரே ஏனெனில் இன்று இவர்கள் ஆளும் இனம் இல்லை எங்கணும் அடக்கப்டுகின்றனர் கிராமங்களிற் பிரபுத்துவ ஆட்சி இருந்தாற் போதுமானது நமக்கு ஓர் அரசுதேவையில்லையென்ற போக்கில் நடந்து கொண்டனர் தமிழர் செயலற்ற மாயாவாத வேதாந்தத்தால் வஞ்சிக்கப்பட்டனர் சமயங்களுள்ளும் சமயக் கிளைகளுள்ளும் அவற்றின் உபகிளைகளுள்ளும் தாழ்ச்சி உயர்ச்சி கூறினர் அவரவர் சமயம் அவரவர்க்குச் சிறந்ததன்றோ தொழிலிலும் தாழ்ச்சி உயர்ச்சி கூறினர் சமூகத்திற்கு அவசியம் தேவையான பொய் களவற்ற தொழில்கள் யாவும் சமமான சிறப்பிற்குரியவை என்னும் பாரதப் பெருந்தத்துவஞானி ஒருவர் கூறிப்போந்தனரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ச்சி உயர்ச்சி சொன்னதால் ஏற்பட்ட விளைவென்ன ? வகுப்புக்கு வகுப்பு ஒத்துழையாமை ஏற்பட்டது வெளிப்பகையிலும் உட்பகை பெருக்கமடைந்து பகைமையை மூட்டியது உலக அரங்கிற் பொலிவிழந்தனர் தமிழர். வாழ்க்கையென்னும் பந்தயக் களத்திற் படுதோல்வியுற்றனர்

வாலபரே நம் சகோதரராகிய முசல்மான்களைப் பாருங்கள் இவர்கள் தமக்குள்ளே சகோதரத்துவத்தை நிலைநாட்டினர். வெற்றி பெற்றனர். தொழில் வளத்தைப் பெருக்கினர். பெருஞ் செல்வந்தனராயினர். இவ்வுலகிற் பல தேசங்களில் தலைநிமிர்ந்து ஆட்சிபுரிகின்றனர்.

இந்நூலிலே முன்னரே உலகப் பிரசித்தி பெற்ற பேராசிரியர் ஒருவரின் கருத்தினை எடுத்துக்காட்டித் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லுதல் ஒரு கபட நாடகமெனக் கூறினோம்.

நாம் வசிக்கும் ஒரு மூலையை நோக்குதலன்றி உலகம் முழுவதின் கருத்துக்களை நூல்கள் வாயிலாகவும் அறிந்து தொழில் வளத்தைப் பெருக்குதல் நம் கடனாகும்

சமயம் மனிதனின் பித்தலாட்டம். தொழில்வளம் பெருக்குதலுந் தேசியநலனுமே வாழ்க்கையின் குறிக்கோள் எனக்கூறி உலகஅரங்கில் வல்லமை பெற்று ஆட்சி நடாத்தும் தேசங்கள் சில உளவென்பது நாமறிந்த உண்மையே. இதற்கு எதிர்மாறாகச் சமூகத்திற்கு அவசியந் தேவையான தொழில்வளங்களையும் தேசியநலனையும் குறைவுபடக் கூறி ஆக்கத்தையும் ஊக்கத்தையும் குறைக்குஞ் சமயக்கொள்கைகளால் பொலிவிழந்த இனங்களும் இவ்வுலகில் உண்டென்பதும் உண்மையே.

இவ்வித சமயத்தினர் உணரவேண்டிய பெரியதோர் உண்மை உண்டு. அஃது எந்தச் சமயமும் வாழ்க்கையிற் கண்ட உண்மைகளை மறைக்க முடியாதென்பது. (Religion ought not be an escape from the realities of life)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிட்டவசமாய் இவ்விரு வகுப்புள்ளும் சிக்கிக் கொள்ளாதவராய்த் தேசியநலனுக்குரிய தொழில் வளத்துக்கும் அனுசரிக்குஞ் சமயத்துக்கும் முரண்பாடில்லாத சமநிலையை உருவாக்கி வாழ்க்கை என்னும் பந்தயக்களத்தில் வெற்றி பெற்ற பல தேசங்களின் முன்னேற்றத்தை நாம் கூர்ந்து நோக்குதல் நன்றன்றோ

இவ்விடத்து ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை எடுத்துக்காட்டுவாம் அவர்கள் (தமிழர்) அறிஞர்களோ, மாள்வுக்குப் பின்னுள்ள வாழ்வைப்பற்றிய பகட்டொளிமிக்க வற்றல் கானற் கனவுகளில் தங்கள் நேரத்தை வீணாக்கினர் வருங்காலம் பற்றிய அவர்கள் சிந்தனையின் மட்டற்ற ஆழமே தம் நிகழ்கால நிலைபற்றிச் சிந்திக்காதபடி அவர்களைத் தடுத்தன உண்மையில் வறுமைபற்றியும் முழுநிறை துறவுபற்றியுமே அவர்கள் பெருமை கொண்டனர் ஏனெனில் இவற்றின் மூலமே ஒருவன் அவாவை அடக்கவும் அதன்மூலம் பிறப்பிறப்பு என்னும் புயலார்ந்த கடலிலிருந்து மீளவும் முடியுமென்று அவர்கள் நம்பினர். தமிழர் தேசிய நலிவின் விதைகளை நாம் இங்கே காண்கிறோம் அவை தமிழரையும் மற்று எல்லா இந்து இன மக்களையும் வீழ்த்தி வருகிற படையெடுப்பாளர்களுக்கெல்லாம் எளிதில் இரைகளாகும்படி செய்துள்ளன

இறுதியில் எந்தத் தேசத்தினரும் எந்தச்சனமும் முன்னேற்றம்பெற வாழ்க்கையில் எத்தகைய போக்குடையராய் இருத்தல் வேண்டுமென்பது பற்றிப் பண்டிதர் நேரு கூறியவற்றை ஈண்டுத்தருவாம்

விஞ்ஞான முறையை உபயோகித்தல் எல்லாத்தேசத்தவருக்கும் எல்லாச்சனங்களுக்கும் இன்றியமையாதது தவிர்க்க முடியாததுமாம் இம்முறை உபயோகித்தலோடு இன்னொன்றும் தேவையாகின்றது.

அஃது உண்மையையும் புது அறிவையுந் தேடுதலில் உபயோகிக்கத் தயங்காத கண்டன முறை நாமே பரீட்சித்தும் உபயோகித்தும் பார்க்காது எதையும் ஒப்புக்கொள்ள மறுத்தல் கண்ட புது அறிவை ஆதாரமாகக்கொண்டு அதற்கு முரண்பட்ட பழைய முடிபுகளைக் களைதல் பழைய கொள்கைகளைவிட்டு நாம் அவதானித்த உண்மைகளில் நம்பிக்கை வைத்தல் மனதைக்கட்டுப்படுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் விஞ்ஞான முறையை உபயோகித்தலுக்கன்றி வாழ்க்கைக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குந் தேவையாகின்றன

நமது முக்கியத்துவம் வாய்ந்த பற்றுக்கள் சில சமயப்பற்று மொழிப்பற்று இனப்பற்று நாட்டுப்பற்று என்பன அவற்றுட் சிறந்தவை தொழில்வளஞ் சிறக்காவிடின் இப்பற்றுக்களாற் பெரிதும் பயனின்று ஆதலால் நன்நெறிநின்று ஆற்றுந் தொழில்களில் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் குறைவுபடக் கூறும் எவ்விதக்கொள்கைகளையும் களைதல் ஒரு தேசமே ஒரு சாதியோ முன்னேற வழிவகுக்கும் என்க

நன்றி

இக் கருத்துக்களானது வணிகர் வரலாறு என்னும் நூலில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை. முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களது சகோதரரும், இளைப்பாறிய வித்தியாதரிசகரும் சமாதான நீதவானுமாகிய திரு மு.வே .சீவரத்தினம் அவர்களால் மேற்படி வணிகர் வரலாறு என்னும் நூல் 1966 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இந் நூலை பாட்டா வமிச வழியினர் சங்கம், சிந்துபுரம், வட்டுக்கோட்டை என்ற அமைப்பினர் வெளியிட்டுள்ளனர். காலத்தின் தேவை கருதி இக்கருத்துக்கள் மறுபிரசுரமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்குப் பயன்தரும் மருத்துவக் குறிப்புக்கள் சில......

**உயர் குருதியமுக்கமும் மாரடைப்பு நோய் பாரிசவாதம்**

இருதயம் எமது உடலிற்குத் தேவையான குருதியை உடல்முழுக்க செலுத்துகின்றது இருதயம் தனக்குத் தேவையான பிராணவாயுவையும் சக்தியையும் இரு இரத்தக் குழாய்களின் மூலம் பெறுகின்றது. இவ் இரத்தக் குழாய்களில் படிப்படியாக கொழுப்பு சிறு வயதிலேயே படிய ஆரம்பித்துவிடும். இவ்வாறு கொழுப்பு படிவதால் இரத்தோட்டம் பகுதியாகவோ – முழுதாகவோ தடைப்படும். இதனால் இருதயம் வேகமாக வேலை செய்ய வேண்டி இருக்கும் போது அதற்கு மேலதிகமாக தேவைப்படும் பிராண வாயுவும் சக்தியும் கிடையாததால் மார்பு வலி ஏற்படும். இது Angina எனப்படும்

இந்நோ மார்பில் இடது பக்கத்தில் இறுகப்பிடிப்பது போல் ஆரம்பித்து கைகளிற்கோ அல்லது கழுத்திற்கோ பரவும். இது நாங்கள்

- உணர்ச்சி வசப்படும்போது
- உடற்பயிற்சியின் போது
- கடுமையான வேலைகள் செய்யும் போது
- அதிகளவு உணவு உண்டபின் ஏற்படும்

இதனை ஆரம்பத்திலே வைத்தியரிடம் காட்டித் தகுந்த மருந்துகளைப் பாவிப்பதன் மூலமும், எமது உணவிலும் வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமும் மாரடைப்பு நோய் ஏற்படுத்துவதைத் தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுப்பு படிந்த குழாய்களில் குருதி கட்டுப்படுவதால் அக் குருதிக் குழாய் முற்றாக அடைபடும். இதனால் அவ் இரத்தக்குழாய் மூலம் பிராணவாயுவையும் சக்தியையும் பெறும் இருதயத்தின் பகுதி இறக்கும். இதுவே மாரடைப்பு எனப்படும் .இதன் அறிகுறிகளாவன

o மார்புவலி 30 நிமிடத்திற்கும் கூடுதலாக இருக்கும்
o வியர்வை வாந்தியெடுத்தல் தலைசுற்று மயக்கம் மூச்சுவிடச் சிரமம் என்பன ஏற்படலாம்

மாரடைப்பு ஏற்படின் இருதயத்தில் ஒருபகுதி இறப்பதால் இருதயம் உடலுக்குத்தேவையான அளவு குருதியைச் செலுத்த முடியாது. உடலில் நீரும் உப்பும் தங்கும் இதனால் கால்கள் வீங்கி மூச்செடுக்க சிரமம் ஏற்படும் (Heart Failure ). அத்துடன் இருதயம் ஒழுங்கற்றுத் துடிக்கும் (Arrhythmia ). இவையும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் . மாரடைப்பால் ஏற்படும் மரணங்களில் 50 வீதமானவை வைத்தியசாலைக்கு வருமுன் இருதயத்துடிப்பில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படுகின்றன இவையாவும் தடுக்கக்கூடிய இறப்புக்களே .

மார்புவலி ஏற்படின் வைத்தியசாலைக்கு உடனடியாக சென்று சிகிச்சை பெற்று இவ் இரத்தக்கட்டியை Streptokinase , (Aspirin ) அஸ்பிரின் போன்ற மருந்துகளின் மூலம் கரைப்பதனால் பெரியளவிலான பாதிப்பு இருதயத்திற்கு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். ஆகவே மேற்கூறிய அறிகுறிகள் ஏற்படின் உடன் ஒரு அஸ்பிறினைக் கடித்துச் சாப்பிட்டு விட்டு அருகிலுள்ள பெரியவைத்தியசாலைக்குச் செல்லவும் பெரிய இரத்தக்குழாய்களில் முழுமையாக அடைப்பு ஏற்படின் திடீர் மரணம் ஏற்படலாம். வீட்டிலோ அல்லது வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியிலும் ஏற்படலாம் . ஆகவே மார்புவலி ஏற்படின் அதனை அலட்சியம் செய்யாது தாமதமின்றி உடன் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு செல்லவும். இதேபோல் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் பாரிச வாதம் ஏற்படும்.

இந்நோய் எப்படிப்பட்டவர்கட்கு ஏற்படும்

1.உங்கள் குடும்பத்தில் –பரம்பரையில் யாருக்கேனும் மாரடைப்பு பாரிசவாதம் உயர் குருதி அமுக்கம் இருந்தால்

உ. நீங்கள் கீழே குறிப்பிட்ட பழக்கங்கள் நோய்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவராயின்

- o உயர்குருதியமுக்கம் (High Blood Pressure)
- o இரத்தத்தில் அதிகளவு கொழுப்பு ( High Choclestrol )
- o நீரழிவு நோய் (Diabetes mellitus)
- o புகை பிடித்தல்
- o உடல் அதிக பருமன் (Obesity)
- o உடற்பயிற்சி இன்மை (Sedantary Life)
- o. அதிகளவில் மது அருந்துதல் ( Alcohol Abuse)
  அத்துடன் இந் நோய் ஆண்களையும் 40 வயதிற்கு
  மேற்பட்டோரையுமே பொதுவாக பாதிக்கும்

மேற்கூறியவை எவ்வாறு எம்மை பாதிக்கின்றது அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம்

1. **வயது**

முப்பத்தைந்து நாற்பது வயதை அடைந்தவுடன் கிரமமாக வைத்தியப் பரிசோதனை செய்வதன் மூலம் மாரடைப்பு நோயின் தாக்கத்தை அறிந்து அதற்கேற்ற சிகிச்சையை முன்கூட்டியே பெற வேண்டும்

2 Sex

பெண்கள் மாதவிடாய் நிற்கும் காலம் வரை அகஞ் சுரக்கும் சுரப்புகளால் (Hormones ) மாரடைப்பு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார்கள். மாதவிடாய் நின்றதும் மாரடைப்பு நோய் இவர்களையும் ஆண்களைப் போலவே பாதிக்கும். ஆபத்து இருக்கின்றது ஆகவேதான் பெண்களுக்கு மாதவிடாய் நின்றபின் அவர்களின் குறைவடையும் Hormones ஐ கொடுப்பதால் (Hormone


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Replacement Therapy ) மாரடைப்பு ஏற்படும் ஆபத்தைக் குறைக்கலாம். இது மட்டுமன்றி இவ் Hormones – பெண்களுக்கு ஏற்படும் எலும்பு மென்மையாதல் (Osteoporosis ) எலும்பு உடைதல் (Fractures ) பாரிசவாதம் என்பவற்றிலிருந்தும் பாதுகாக்கும்.

3 **உயர் குருதியமுக்கம்** (High Blood Pressure )

குருதியமுக்கத்தில் Systolic Diastolic என இரு அளவுகள் எடுக்கப்படுகின்றன . Systolic 160 mm Hg இற்கு கூடவாயின் அல்லது Diastolic 90 mm Hg இற்கு கூடவாயின் நீங்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றீர்கள். இந் நோய் ஏறக்குறைய 15% மக்களை பாதிக்கின்றது. இந் நோயிற்கு ஆரம்பத்தில் எந்தவிதமான அறிகுறிகளும் காணப்படமாட்டாது. ஒரு சிலருக்கு மட்டுமே தலைவலி தலைச்சுற்று என்பன காணப்படும். ஏனையோர் தற்செயலாக வேறு காரணங்களுக்காக குருதியமுக்கத்தை அளக்கும் போது அல்லது மாரடைப்பு பாரிசவாதம் போன்ற நோய்கள் ஏற்பட்ட பின்பே கண்டுபிடிக்கப்படுகின்றார்கள். எவ்வளவிற்கு குருதியமுக்கமும் கூட உள்ளதோ அவ்வளவிற்கு எமது உடலிலுள்ள உறுப்புக்களை அது பாதிக்கும்

உயர் குருதியமுக்கத்தினால் முக்கியமாக பாதிக்கப்படும் உறுப்புக்களாவன

இருதயம் – இருதயத் தசைகள் வீங்குதல் (Hypertrophy )
மாரடைப்பு ( Heart Attack )
இருதயம் குறைவாக வேலை செய்தல்
(Heart Failure )

உயர் குருதியமுக்கம் உள்ளவர்கட்கு இருதயம் குருதியை உடல்முழுக்க செலுத்துவதற்கு அதிகளவில் இருதயம் வேலை செய்யும். இதனால் இருதயம் வீங்கி தனது வேலையை செய்யமுடியாமல் போய்விடும். கொழுப்பு அதிகளவில் இரத்தக் குழாய்களில் படிந்து மாரடைப்பும் ஏற்படும்

மூளை – தலைச்சுற்று தலைவலி
குருதிக்குழாய் அடைபடுதல் – (Thrombosis )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதிக்குழாய் வெடித்து மூளைக்குள் இரத்தம் பெருகுதல் (Haemorrhage )

இவை காரணமாக

பாரிசவாதம் ஏற்படும்

கண் பார்வை இழத்தல்

சிறுநீரகங்கள் – சிறுநீரகம் வேலை செய்யாது போதல்

குருதிக்குழாய்கள் – அடைபடல் வீங்குதல் என்பதன் காரணமாக அக்குருதிக் குழாய்களின் மூலம் குருதியைப் பொறும் உடலுறுப்பு வேலை செய்யாது போய்விடும்

உங்களிற்கு உயர் குருதியமுக்கம் காணப்படின் இதனை மருத்துவ ஆலோசனையுடன் குறைத்து சாதாரண அளவில் வைத்திருக்க வேண்டும் அத்துடன்

- உணவில் உப்பை குறைத்தல்
- உணவில் எண்ணெய் கொழுப்பை தவிர்த்தல்
- மது புகைத்தலை நிறுத்தல்
- தகுந்த உடற் பயிற்சி

என்பன மிகமிக முக்கியமானவையாகும்

உயர் குருதியமுக்கத்திற்குரிய மருந்துகளை பாவித்தால் குருதியமுக்கம் சாதாரண அளவில் இருக்கும் ஆனால் வில்லைகளை நிறுத்தினால் மீண்டும் குருதியமுக்கம் கூடிவிடும் ஆகவே வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக வில்லைகளை பாவிக்க வேண்டியது மிகமிக முக்கியமாகும் வில்லைகள் உங்களிற்கு ஒத்துவராவிடின் வைத்திய ஆலோசனையுடன் உங்களிற்கு ஒத்துவரக்கூடிய வில்லைகளை பாவிக்கவும்

## 4 நீரிழிவு நோய்

இந்நோய் உள்ளவர்கள் சாதாரண நோயற்ற ஒருவருடன் ஒப்பிடும் போது இருமடங்கு அதிகமாக மாரடைப்பு நோயினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கப்படுகின்றார்கள் குருதியில் உள்ள சீனியின் அளவை நீரிழிவு நோய்க்குரிய மருந்துகளை பாவிப்பதன் மூலமும் கட்டுப்பாட்டில் வைத்திருந்து இதய நோய் ஏற்படுவதை தடுக்கலாம்

5. **புகைத்தல்**

புகைத்தல் அல்லது புகையிலையை எந்த வடிவில் எவ்வாறு உபயோகித்தாலும் (சிகரெட் பீடி சுருட்டு பைப் புகையிலை போடல் ) அது எமது தேக ஆரோக்கியத்தைப் பாதிக்கும். புகைப்பதால் இருதயத்திற்கு கிடைக்கும் பிராண வாயுவின் அளவை குறைக்கும்

குருதியமுக்கத்தைக் கூட்டும்

இருதய துடிப்பைக் கூட்டும்

இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிவதை துரிதப்படுத்தும்

இவற்றால் மாரடைப்பு ஏற்படுவதற்குரிய சாத்தியக் கூறு கூடும் இது மட்டுமன்றி புகைப்பவர்கட்கு பலவிதமான புற்று நோய்கள் (நுரையீரல் புற்றுநோய், தொண்டை வாயில் புற்று நோய் ) ஏற்படும் தொய்வு நோய் அதிகளவில் உடலை பாதிக்கும். புகைப்பவர் புகைக்கும் போது வெளியிடும் புகை அருகிலுள்ளோரையும் பாதிக்கும் புகைப்பவர் புகைத்தலை நிறுத்துவதன் மூலம் அவர் தனது ஆரோக்கியத்தை மட்டுமன்றி தனது குடும்பத்தாரின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கின்றார்

6 **குருதியிலுள்ள கொழுப்பின் அளவு** (Cholestrol )

எமது அனைவரின் குருதியிலும் கொழுப்புக்கள் (Lipids ) காணப்படுகின்றன இவை குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக ஒரு சிலரின் குருதியில் காணப்படும் இது(Hyper Lipidaemia ) என ஒருவரின் குருதியில் –

Cholestrol>240 mg /dl
LDL Cholestrol >130 mg /dl
HDL Cholestrol > 40 mg /dl (Protective Cholestrol )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக் காணப்படின் இவை விரைவில் குருதிக் குழாய்களில் படிந்து இரத்தோட்டத்தை தடைசெய்யும் இதனால் மாரடைப்பு பாரிசவாதம் போன்ற நோய்கள் மிகவும் சிறிய வயதிலேயே ஏற்படும்

இதனைத் தவிர்க்க உங்கள் குருதியிலுள்ள கொழுப்பின் அளவை வருடத்திற்கு ஒரு தடவையேனும் பரிசோதித்துப்பார்க்க வேண்டும் குருதியில் கொழுப்பு அதிகளவில் காணப்படின் உணவில் கீழ் கூறப்படும் மாற்றங்களை ஏற்படுத்துவதாலும் தேக அப்பியாசத்தின் மூலமும் குருதியிலுள்ள கொழுப்பைக் குறைக்கலாம் இரண்டிற்கும் குருதியிலுள்ள கொழுப்பு குறையாவிடின் வில்லைகளைத் தொடர்ந்து பாவித்து இதனைக் குறைக்க வேண்டும்

நீங்கள் அத்களவு கொழுப்ப /எண்ணெயை உணவில் சேர்த்தால் அது உங்கள் இரத்தக் குழாய்களில் படிந்து இருதயத்திற்கு இரத்தம் செல்வதை தடுக்கும் இதனை தவிர்க்க

மிகக் குறைந்தளவு மிருகக் கொழுப்பை உண்ணவும் / தவிர்க்கவும் பொரித்த உணவுகளை உண்ண வேண்டாம். நெய், தேங்காய்ப்பால் Cheese Butter Margarine சிவப்பு இறைச்சி உலர்ந்த பழங்கள் ஊறுகாய் அச்சாறு முட்டை மஞ்சள் கரு ஈரல் மூளை ஆகியவற்றை உண்ண வேண்டாம் ஆடை நீக்கிய பால்மா (Non Fat ) பாவியுங்கள்

கூடியளவில் நார்த்தன்மையான உணவை உண்ணுங்கள் உ+ம் பழங்கள் இலைக்கறிவகைகள் அவரையினம் கோவா தானியங்கள் மீன் தேவையான அளவு உண்ணலாம்

## உடல் பருமனானவர்கள்

அதிக உடற் பருமன் உடையவர்களின் இருதயம் குருதியை உடல் முழுக்கச் செலுத்துவதற்கு அதிகளவில் வேலை செய்ய வேண்டும் அத்துடன் இவர்களது குருதியமுக்கம் கூடுதலாகவும் குருதியிலுள்ள கொழுப்பின் அளவு கூடுதலாகவும் காணப்படலாம் இவர்கள் நீரளிவு நோயாலும் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பம் அதிகம் இவை யாவும் மாரடைப்பு நோய் ஏற்பட வழிவகுக்கும் ஆகவே உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பயிற்சி மூலம் உடற் பருமனை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

## 7 உடற் பயிற்சி

ஒழுங்காக வாரத்தில் 5–6 நாட்கள் செய்யும் உடற்பயிற்சி

உங்கள்

குருதியமுக்கத்தை குறைக்கும்
குருதியிலுள்ள கொழுப்பின் அளவை குறைக்கும்
இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து குழாய்கள்
அடைபடுவதை தடுக்கலாம்

நீங்கள் முதன் முதலாக உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கும் போது ஆரம்பத்தில் 10–15 நிமிடங்கள் வேகமாக நடக்கவும். இதனை வாரத்தில் 2–3 தடவைகள் மட்டும் செய்யவும். பின் படிப்படியாக செய்யும் நேரத்தை 20 – 25 – 30 நிமிடங்களாக கூட்டவும் பின்பு செய்யும் தடவைகளை வாரத்திற்கு 3 –4 –5–6 எனக் கூட்டவும்

- நீங்கள் TNT/G T N வில்லைகளை பாவீப்பவராயின் தேகப்பயிற்ச்சியின் போது அவற்றை கொண்டு செல்லவும் .
- பயிற்சியின் போது மார்பு வலி ஏற்படின் உடன் பயிற்ச்சியை நிறுத்தவும் .TNT வில்லைகள் இரண்டை நாவின் கீழ் வைக்கவும் உடன் வைத்தியரை சந்திக்கவும் புதிதாக தேகப் பயிற்சி செய்யும்முன் வைத்திய ஆலோசனையின் பின் ஆரம்பீக்கவும்.

## உடற்பயிற்சியின் மூலம்

- குருதியில் உள்ள கொழுப்பு குறையும் மாரடைப்பு உயர் குருதியமுக்கம் நீரழிவு போன்றவற்றை தவிர்க்கலாம் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் .
- எலும்புகள் மென்மையாவது(osteoporosis) உடைதல் (fractures) தடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இருதயம் சுவாசப்பை வலிமை பெறும்.
- உடலும் மனமும் வலிமை பெறும்.
- உடலில் ஊளைச்சதை போடுதல் தடுக்கப்படும்.

## மதுபானம் ( alcohol abuse)

அதிகளவு மதுபானம் அருந்துதல் இருதய தசைகளை வலுவிலக்கச் செய்யும் (cardiomyopathy) குருதியமுக்கத்தை கூட்டும் இது மட்டுமன்றி ஈரல் மூளை நரம்புகள் எலும்பு மச்சை ஆகிய உறுப்புக்களையும் பாதித்து பலவிதமான நோய்களை ஏற்படுத்தும் ஆகவே மதுபானம் அருந்துதலை நிறுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதல் சுகவாழ்வுக்கு அவசியமாகும்.

## உணர்ச்சி வசப்படுதல்- stress

நீங்கள் உங்கள் மனதை ஓய்வாக இலகுவாக வைத்திருப்பது மிக அவசியம். நீங்கள் உணர்ச்சி வசப்படும் போது கோபப்படும் போது உங்கள் உடலில் பல விதமான மாற்றங்கள் ஏற்படும். இவை உங்கள இருதயத்தை பாதிக்கும் இதனை தவிர்ப்பது கட்டுப்படுத்துவது மிக அவசியம் இகற்கு யோகாசனம் தியானம் போன்றவை மிகவும் உதவும் பொழுது போக்காக நீங்கள் மனமகிழ்வுடன் (hobbies) செய்யும் வேலைகளும் அதிகளவில் உதவி செய்யும். முடியுமானால் உங்கள் உணர்ச்சிகளை தூண்டும் செயற்பாடுகளை தவிர்க்கவும்.

## மருந்துகள் (medication)

இருதய நோயாளிகளிற்கு இந்நோயை குறைக்க அல்லது மாரடைப்பு ஏற்படுவதை தடுக்க மருந்துக்கள் கொடுக்கப்படும்.

1.asprin-பாதி-ஒரு நாளிற்கு ஒருதரம் சாப்பாட்டிற்கு பின் இது குருதி இரத்தக்குழாய்களில் கட்டிபடுவதை குறைத்து மாரடைப்பை மட்டுமன்றி பாரிசவாதம் ஏற்படுவதையும் தடுக்கும் நாற்பதுவயதிற்கு மேற்பட்டவர்கள் இகனை பாவிப்பது பல விதத்திலும் நன்மையளிக்கும் ஆனால் வயிற்றில் புண் (peptic ulcer) குருதியுறையாத நோய் உள்ளவர்கள் இதனை பாவித்தல் கூடாது இம்மருந்தை பாவிக்கும் போது ?வயிற்றில் எரிவு ஏற்படின் அல்லது மலம் கறுப்பாக தார் போல் அல்லது இரத்தமாக வாந்தி எடுத்தால் மருந்தை நிறுத்திவிட்டு வைத்தியரை அணுகவும் (aspiren ஐ 12 வயதிற்கு குறைந்த பிள்ளைகளிற்கு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்லூட்டும் தாய்மாருக்கு கொடுத்தல் கூடாது . அவ்வாறு கொடுத்தால் அது reys syndrome எனும் உயிருக்கே ஆபத்து விளைவிக்ககூடிய நோயை ஏற்படுத்தும்)

2. T.N.T / GTN -மார்புவலி வரும்போது நாவின் கீழ் வைத்தால் வலி மாறிவிடும் இவ்வில்லையை சூரிய ஒளிபடாதபடி கறுப்பு போத்தலில் மூடிவைக்கவும்.

3. P-blockers- இருதயதுடிப்பின் வேகத்தை துறைக்க உதவும் இவ் வில்லைகளை தொய்வு நோய் உள்ளவர்கள் பாவிக்ககூடாது

4. Nitrates- இருதயத்திற்கு செல்லும் குழாய்களை விரிவடையசெய்யும் இவ்வில்லைகள் ஆரம்பத்தில் தலைவலியைக் கொடுத்தாலும் 2 - 3 நாட்களில் தலைவலி மாறிவிடும்.

5. Libid Lowering drugs- குருதியிலுள்ள கொழுப்பைக் குறைக்க உதவும்.

6. உயர் குருதியமுக்கம் நீரிழிவு நோய் என்பன இருப்பின் அவற்றை கட்டுப்படுத்த வில்லைகளை பாவிக்கவும்

நீங்கள் உங்கள் மருந்துக்களை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவில் எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இத்துடன் இம்மருந்துக்களை சடுதியாக நிறுத்தினால் அது உங்கள் இருதயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே மருந்துக்களை மருத்துவ ஆலோசனையுடன் தொடர்ந்து பாவிக்க வேண்டும் .

மருந்துக்களை தொடர்ச்சியாகப் பாவிப்பதன் மூலம்

- நெஞ்சு நோ வருவதைத் தடுக்கலாம்.
- மாரடைப்பு. பாரிசவாதம் ஏற்படுவதைத் தடுக்கலாம்

மருந்துக்களை பாவிக்கும் போது ஏதாவது அறிகுறிகள் ஏற்படின் மருத்துவரிடம் கூறவும் சில சந்தர்ப்பங்களில் மருந்தினால் நோயைப்பூரணமாக கட்டுப்படுத்த முடியாமல் போய்விடலாம். இப்படிப்பட்டவர்களின் இரத்தக்குழாயிலுள்ள அடைப்பை சத்திரசிகிச்சை மூலம் அகற்ற முடியும் coronary arteryb bypass graft அல்லது angioplasty மூலம் இதனை செய்யலாம் ஆனால் சத்திரசிகிச்சையின் பின்பும் மருந்தைத் தொடர்ந்து பாவிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரடைப்பு நோய் பாரிசவாதம் போன்ற நோய்களிற்கான முக்கிய காரணம் இரத்த குழாய்களில் கொழுப்புப்படிதலே. இது மிகவும் சிறுவயதிலேயே ஆரம்பித்து விடும். முக்கியமாக எமது உறவினர்களில் யாருக்கேம் இந் நோய் இருந்தால் இது எம்மையும் எமது பிள்ளைகளையும் பாதிக்கும். ஆகவே இந்நோய்களை தடுப்பதற்கு சிறுவயதில்லிருந்தே அதற்குரிய நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் prevention is better then cure. ஆகவே நாமும் எமது பிள்ளைகளும்

- ஒழுங்கான தேகப்பயிற்சி
- கொழுப்பில்லாத குறைந்தளவு உப்புள்ள உணவு
- புகைத்தல் அதிகளவில் மது அருந்துதலை தவிர்த்தல்
- அதிக உடற்பருமனை குறைத்தல்
- மனதை ஓய்வாக(relaxation) வைத்திருத்தல்
- மருத்துவரின் ஆலோசனைபடி மருந்துக்களை ஒழங்காகவும் தொடர்ந்து பாவித்தல்.
- ஓழங்காக எம்மை மருத்துவ பரிசோதனைக்குஉட்படுத்தல்
- உயர்குருதியமுக்கம் நீரிழிவுநோய் குருதியில் அதிகளவு கொழுப்பு என்பன இருப்பின் வில்லைகளை பாவித்து அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

என்பன மூலம் மாரடைப்பு பாரிசவாதம் போன்ற நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை வளர்ப்பினிலே.....

"......... ஒருவன் நல்லவனாவதும் தீயவனாவதும்
அன்னை வளர்ப்பினிலே"

என்று பாடினான் கவிஞன். இந்த வார்த்தைகளை ஒரு தடவை எண்ணிப்பார்க்கின்றோம்.

பல சோதனைகள் மத்தியில் தனது மகனை ஓர் விஞ்ஞானப் பட்டதாரியாக்கிய, ஓர் சமூக சிந்தனையாளனாக்கிய அந்த அன்னையின் சிந்தனைகளை மனதில் மீட்கின்றோம்.... வியக்கின்றோம்....

நாடு விட்டு நாடு சென்றதும் அநேகர் தாய் மண் பற்றை மறந்துவிடுகின்றனர் – சந்தர்ப்பங்கள் மறக்க வைத்துவிடுகின்றன. ஆனால் இந்த அன்னையின் அரவணைப்பில், அறிவூட்டத்தில் வளர்ந்த மகன் தாய் மண்ணின் மீது கொண்ட பற்றும் , சிந்துபுரம் வாழ் இளைய தலைமுறையின் கல்வி மீது கொண்ட அக்கறையும் இவரது செயற்பாடுகள் மூலம் புலப்படுகின்றன.

இங்கு நிற்கும் இந்தச் சில நாட்களில் கூட இளந் தலையினருக்கான கற்றல் வழிகாட்டடல் வகுப்புக்கள், தாயின் மரணவீட்டிற்கு வரும் போது கூட இளைய தலைமுறையினருக்கு ஏற்ற புத்தகங்களைக் கனடாவில் இருந்து கொண்டு வந்து நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தமை, சனசமூக நிலைய வளர்ச்சியில் அக்கறையுடனான செயற்பாடுகள், எமது கிராமத்து வரலாறுகள் ஆவணப்படுத்தப்படவேண்டும் என்ற உயரிய சிந்தனை .............. இவ்வாறு பல நற்சிந்தனைகளைக் கருவிலே ஊட்டிய அந்தத் தாயின் பெருமையை எவ்வாறு கூறுவது..............

அந்தத் தாயின் சிறப்பைக் கூறும் தகைமை எமக்கு உண்டோ!
அந்தத் தாயின் உயரிய சிந்தனைகளை நாமும் பின்பற்றுவோமாக!

- சிந்துபுரம் வாழ் இளைஞர்கள் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கச்செய்து மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத்தலைவி மறைந்த செய்தி கேட்டு ஓடோடிவந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அயலார், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, கடிதம், தந்திமூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், அனைத்து உள்ளங்களிற்கும், இந் நூலை அழகுற அச்சிட்டு உதவிய மாயன் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் ெ

வே

ெ

**நாகலிங்கம்**
+
வள்ளியம்மை

தவமணி
சிவயோகம்மா
திரிபுரபுவனேஸ்வரி
இராசரத்தினம்

**பொன்னையா**
+
தையல்முத்து

இராசகோபால்
பங்கயம்
சரோஜினிதேவி
புவனசேகரம்பிள்ளை
ஸ்ரீபத்மகோபால்
அன்புக்கரசி

**இலட்சுமிப்பிள்ளை**
+
வல்லிபுரம்

கனகாம்பிகை
முத்துப்பிள்ளை
பரமேஸ்வரி
கதிரைமலைநாதன்
மனோரஞ்சிதம்
விமலநாதன்

ப
பா
ச
இ
அ
ே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடி வழி

வேலுப்பிள்ளை
+
பெண்

முருகேசு
+
பரிமளம்

பத்மநாதன்
பாக்கியநாதன்
சண்முகநாதன்
இராசலட்சுமி
அம்பிகைநாதன்
யோகநாதன்

செல்லம்மா
+
செல்லத்துரை

முத்துச்சாமி
+
சிவபாக்கியம்

நாதாந்தரூபி
தயாபரன்
சிறீதரன்
சிவபரன்

சிவக்கொழுந்து
+
முருகேசு

சாந்தகுணதேவி
கருணானந்தசிவம்
தவலோகநாதன்
சிவநாதன்
பாக்கியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணபதியார் துரைஐயா
## வழித்தோன்றல்கள்

மினாயர்
|
வேலாத்தை

- கணபதியார் (நெடும்)
  - கதிரேசு
    - சரவணை
    - அப்புத்துரை
  - நாகப்பர்
    - கந்தையா
    - நன்னியாசி
- கதிர்காமர் + வீரகாளியசோதரி
  - கந்தையா
  - வேலுப்பிள்ளை + ஆச்சிப்பிள்ளை (அப்பாவின் மகள்)
    - நாகநாதர் + அன்னமுத்து
      - நாகேஸ்வரி
    - தங்கம்மா
    - சின்னத்தங்கம்
    - அப்புத்துரை + அழகம்மா
      - நாகரத்தினம்
      - அற்புதம்
      - தங்கமணி
      - சரஸ்வதி + தேவராசா
    - இராமர் + திரவியம்
      - சிவபாக்கியம்
    - இலச்சுமணன் + பொற்கொடியம்மா
      - வீரகாமாட்சி அம்மா
      - கனகபாதசுந்தரம் + மதிவதனராணி
        - சுந்திரவதனன்
        - வசுமதி
        - கனிமதி
        - சுந்தரேசன்
      - அகிலாண்டேஸ்வரி
      - பரதபத்மினி அம்மா
      - கோணேஸ்வரன் + தர்மகுணராணி
        - கவீதா
        - கோவர்த்தனை
        - அச்சுதன்
        - பானுகோபன்
    - இரத்தினம் + வேலுதிரவியம்
      - பேரானந்தசிவம் + பூலோக நாயகி
        - கஜேந்திரன் (அமரர்)
        - ரஞ்சித்தா
        - மோகனகௌரி
        - நவீனகௌரி
        - இசைமதி
        - சுகந்தன்
        - நிர்த்தனவேல்
        - மேனகரூபன்
- சின்னட்டியார்
  - குமாரவேலு + சிவக்கொழுந்து
    - சூரியப்பிரகாசம்
    - சிவப்பிரகாசம்
    - சீவரத்தினம்
    - நடராசா
    - பஞ்சலிங்கம்
    - இராசலட்சுமி
  - சின்னத்துரை + ஞானசிரோன்மணி
    - புஷ்பபாலன்
    - ஞானசவுந்தரி (பரராசசேகரம்)
    - கெங்காதரன்
    - கமலாதேவி (தம்பிஐயா)
    - குணவீரசிங்கி
    - திசாநாயகி
    - லோகேஸ்வரி (கதிர்வேல்நாதன்)
  - குருசாமி + அமிர்தம்மா
    - கணேஸ்வரன் + ஜீவமலர்
      - லவணகுமார் (ஜெயகலா)
      - பிறேமலதா
      - துஷித்தா
      - லதீபன்
      - மயூரன்
    - பூபாலசுந்தரன் + உதயமலர்
      - குசலகுமார்
      - சுரேஸ்குமார்
      - உதயகுமார்
      - பார்வதி
      - மனோகரன்
  - பெண் + வேலுப்பிள்ளை
  - துரைச்சாமி + ஆச்சிமுத்து
    - ஆறுமுகதாசன் + அருட்செல்வி
      - துசித்ரா
      - ஜோதீஸ்வரன்
      - சஜிந்தா
      - மஞ்சுளா
      - லதீபா
    - தவமணிதேவி + இராசநாதன்

- சூரியப்பிரகாசம் + பாக்கியமுத்து
  - விஜயலக்சுமி
  - மகேஸ்வரன்
  - சாந்தகுமாரி
  - உதயகுமாரி
  - சூரியகுமார்
  - புனிதகுமாரி
  - சந்திரகுமார்
- சிவப்பிரகாசம் + சிதம்பரசிரோன்மணி
  - அருளானந்தம்
  - அன்புக்கரசன்
  - சிவகுணதாசன்
  - சிதம்பரநாதன்
  - தவச்செல்வி
  - நீலாம்பாள்
  - மணிச்செல்வன்
  - அனிதா
- சீவரத்தினம் + செல்லமுத்து
  - கமலராணி
  - மங்களராணி
  - சிவகுமார்
  - புஸ்பராணி
  - ஜீவராணி
  - கங்காராணி
  - கோணேஸ்வரன்
  - இந்திராணி
- நடராசா + மகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா
ர்

# அவர்களின்

ஊமைப்பொடி — பார்வதி — சம்பரம்

கணபதியார்
+
பொன்னுப்பிள்ளை

ம்
வியம்
தசிவம்
நாயகி
மரர்)

சுப்பையா
+
திரவியம்

- அருமைத்துரை + சரோஜினிதேவி
  - கனிமொழி
  - புகழேந்தி
  - சேரலாதன்
  - சசிதாமணி
  - இரஞ்சனா
- செல்வராசா + மனோன்மணி
  - சந்திரவதனி
  - இந்திரரசனி
  - குகரஞ்சினி
  - வீரரஞ்சினி
  - இராசமனோகரி
  - ஜீவராயினி
  - நிர்மலன்
  - ரேணுகரன்

துரைஐயா
+
தவமணியம்மா

- கமலாம்பிகை + ஸ்ரீபஞ்சநாதன்
  - காயித்திரி + ரவீந்திரகுமார் — பிரவீனன், நிமிலியா
  - பார்த்தீபன் + விஜிதா
  - அனிதா + சுகந்தன்
- தேவநாயகி + அருணகிரிநாதன்
  - தனுசலா + சசிதரன்
  - மனோசலா + கமலநாதன்
  - பவித்திரா
  - கேசினி
  - அருளாளன்
- தனவதி + இரங்கநாதன் — ரம்சினி, சந்தியா, புவிரதன்
- கணேஸ்வரன் + அஜந்தினி — கிருசாந்தி, குகவேள், லோகீசன்
- பார்வதிதாசன் + சந்திரவதனி
  - பாமினி
  - சஜிந்தன்
  - திலீபன்
- குகதாசன் + பத்மாவதி
  - காஞ்சனா
  - தினேஸ்கா
- புஷ்பபாலன் + சித்திரபூபதி
  - தில்லைராஜன்
  - கமலநயனி
  - பத்மநயனி
  - ஜெகதீசன்
  - அரவிந்தன்
  - திவாகரன்
- கெங்காதரம் + நகுலாம்பிகை
  - சரோசினிதேவி
  - சுசிலாதேவி
  - கனகசபாபதி
  - ரேனுகா
  - விஜயகுமார்
  - சுரேஸ்குமார்
- குணவீரசிங்கி + கோசலாதேவி
  - கோகுலவாணி
  - கோமதி
  - சுபாஜினி

சா
ஸ்வரி

- செல்வராணி
- சதானந்தன்
- பாலகோபால்
- சசீகலாயினி
- ஸ்ரீகாந்தா

பஞ்சலிங்கம் + செல்வக்கொழுந்தேஸ்வரி — சுதாபினி, வசந்தினி, சாந்தினி, லோகராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயன் பதிப்பகம், வட்டுக்கோட்டை